நலம் தரும் கருவேலி

SRI SARGUNESWARAR TEMPLE, KARUVELI

SRI SARGUNESWARAR

நலம் தரும் கருவேலி

Nalam Tharum Karuveli

தொகுப்பு ஆசிரியர் :

ஆனந்தி ராமச்சந்திரன்

Published by:

Culture And Heritage Trust Of Karuveli

6A, Warren Road, Mylapore, Chennai - 4.

முன் அட்டை	: கருவேலி, ஸ்ரீ ஸற்குணேசுவரர் கோயில் தோற்றம்
இரண்டாவது அட்டை	: ஸ்ரீ ஸற்குணேசுவரர் சந்நிதி
மூன்றாவது அட்டை	: ஸ்ரீ ஸர்வாங்கசுந்தரி ஓவியம் : பத்மவாசன்
நாலாவது அட்டை	: கருவேலி கிராமத்தின் தோற்றம் : கோயில் - குளம்

Printed at :
Bharathan Press
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

அருள்மிகு ஸற்குணேசுவரர் தேவி
ஸர்வாங்க சுந்தரி
ஆலயம்



A DREAM COME TRUE

Veteran Tamil Writer and Scholar, Tiru.Vi.Kalyana Sundara Mudaliar (Tiru. Vi.Ka) said in one of his widely read essays, "It is the temples of Tamil Nadu that have promoted, preserved and sustained the cultural heritage of the land from time immemorial." Appropriately the Temple was chosen as the emblem of the State of Tamil Nadu.

These thoughts crossed my mind when my wife and I visited the temple at Sarguneswarapuram, popularly known as Karuveli village on the banks of Arisilar river in Cauvery Delta. We were anxious to pray at the feet of Lord Sarguneswara who, with his consort Sarvangasundari reigns supreme at this famous shrine. We reached there on a day in July, 2000 in the company of a devoted couple from Kumbakonam. It turned out to be an auspicious occasion. Chanting of Sri Rudram was going on in the sacred precincts of Lord Sarguneswara by an enthusiastic and erudite group of vedic pandits.

** Lord Ganesha
Amman Sannidhi*

What an imposing form of Lord Sarguneswara dwells there! Brahma Sri Ramasarma of Kumbakonam and his wife were

there to welcome one and all entering the temple. It was a 'pradosham' evening the day on which Lord Nataraja dances his cosmic dance for all the Devas. A cluster of devotees was waiting near 'Nandikeswara' outside the entrance to the temple. The location of Nandikeswara in the temple complex is something quite unusual and unique.

We went around the outer prakarams first, seeing the sculptures of exquisite beauty described elsewhere in the booklet by other distinguished visitors to this ancient shrine. When we entered the sannidhi of the Goddess here, we were stunned by what we saw. The life - size idol of Devi Sarvangasundari was decorated gracefully with flowers and exquisite jewels. True to her name the idol radiated a rare and wonderful combination of beauty, gambhiryam and soulabhyam. Sri Lalitha Sahasranama Archana was going on. On that day they were performing 'Ekadina Laksharchana', the day being an auspicious Friday ('Vellikhizhamai' of the Tamil month Aadi) - Lalitha Sahasranama was chanted over a hundred times from early in the morning till late evening. The spontaneous response of the devotees has been so overwhelming. It was a sight for the Angels to see! Not without reason, then did Devi inspire that revered Srividya Upasaka and renowned Scholar in English,

**** Balalayam***
Srilasri Muthukumara Swami Thambiran

Tamil and Sanskrit, Shri T.V. Anantharamaseshan to compose Suprabhathams in Sanskrit in praise of Sri Sarvanga sundari Amman.

What a pleasant surprise it is to know that our veteran writer 'Bharaneedharan' had written about the Karuveli temple years ago in the popular Tamil Weekly 'Anandavikatan' with a good number of black and white photos! In age, experience, wisdom and devotion, 'Bharaneedharan' is far senior to me but as a fellow devotee of Sage of Kanchi, I give him the happy tidings that his sincere prayers for the proper upkeep of this temple expressed so many years ago have begun to bear fruit.

* *Kumbabhishekam*

Excerpts from Dharmapuram Aadheenam's Publication No. 762 'PADIGAM PATHU' - reproduced herein reveal the unique antiquity of this historic temple as known in the days of the revered Tamil Saivite Saint Thirunavukarasar who hails this place as (திருக்கருவிலி கொட்டிட்டை) TIRUKKARUVILI KOTTITAI. It is interesting reading.

Sri M.S.. Viswanathan (Savi), Sri K. Rajendran Managing Editor of Kalki, Smt Anandhi Ramachandan a fine writer with a knowledge of South Indian Culture and Manjula Ramesh editor of the popular women's journal Mangaiyar Malar have

all written in different magazines on the many unique features of this temple that qualify it as a cultural centre of our heritage. I am glad that these have been reproduced in this booklet. We are also proud and happy to reproduce, the article and interview that was published in Hinduism Today a world wide magazine published by the Saiva Siddhantha Church, Hawaii U.S.A. An article that appeared in Tamil by Jabalpur A. Nagaraja Sarma who uses the nom-de-plume 'Aravarasan' also finds its place.

It was later that I realised that, though under the control of the Hindu Religious Endowment Board, this Sarguneswara temple was being renovated, restored and the rituals performed with the active assistance of a Trust founded by Dr. V. Krishnamurthy and his brother - V. Vaidyanathan, Chairman of Kalki Group of Publications.

** Maha Rudra Homam*

Shri V. Vaidyanathan stayed in the background as though he was one of the numerous devotees gathered there. In reality, he was the one who has been giving his all to renovate and maintain this ancient temple. Also, I was introduced to swami Sachidananda who in his previous ashrama was Dr. Sethuraman a Nuclear Physicist a long time resident of United States. He had relinquished everything to stay at the temple

and ensure the daily worship of Lord Siva and Ambal.

Dr. V. Krishnamurthy, who is behind the Trust, was formerly the Chairman and Chief Executive of BHEL, Maruti and SAIL, the three largest government organisations in India. He is acknowledged as the best manager the country had produced. Those who know of his contribution to the economic development of India and his leadership qualities were not surprised at the changes he, with his brother, is bringing about in this ancient village of Karuveli. Their actions seem to corroborate the views expressed by Tiru. Vi.Ka. that the cultural heritage of India lies in the Temples.

During the last four years, Dr. V. Krishnamurthy and his brother Shri. V. Vaidyanathan have directed all their energies and efforts to set up the Culture and Heritage Trust of Karuveli with the object of revitalising, promoting and maintaining the unique culture and heritage of the Cauvery delta. The temple at Karuveli, their ancestral village, was renovated and its Kumbabhishekam performed as a part of the programme. The local population is greatly appreciative that this family has been able to devote so much of their valuable time in the restoration of this and other places of worship in this village and surrounding areas.

Despite many obstacles and problems in Krishnamurthy's way, he devoted time and energy for this noble work. We can attribute this only to the will of God.

The contribution of Shri. V. Vaidyanathan and Shri. G. Kannan of the Trust and the great support given by the citizens of Karuveli and adjoining villages to this laudable mission cannot be forgotten. Thanks to the efforts of the Trust, the Sarguneswarar/Sarvangasundari Temple is receiving great attention. Most of its pristine glory is being restored.

The Temple which was built in the Chola period is becoming a centre of pilgrimage for devotees from all over Tamil

Nadu. A large quadrangle has been constructed in front of the sanctum sanctorum so that religious ceremonies can be performed and discourses and other programmes can be organised in a satisfactory manner for a large audience. A visit to Karuveli will convince everyone about the excellent work being done and what a team of committed people can do to restore and preserve our ancient culture.

May we now invite your kind attention to the appeal by the Management Committee of this Temple and request you to donate handsomely towards the upkeep of this temple and its daily pujas. You will earn thereby the bountiful anugraha of the powerful presiding deities of this Karuveli Temple. I would also place on record our sincere gratitude to Ra. Ganapati (who has compiled the immortal sayings of Kanchi Mahaswami in Tamil in seven volumes of 'Deivathin Kural') for his kindness in drafting the appeal of this Committee and also contributing liberally to the Nityapuja Trust so spontaneously. It is a measure of this sincere devotion that the appeal drafted by him for the Committee has evoked widespread response from devotees all over India. It is this support which is helping the Trust greatly in their continuing efforts in this sacred cause.

Much remains to be done. Let us all cooperate and contribute our mite to enthuse and further energise the Committee to progress towards achieving the objectives of the Trust, which is to 'REVITALISE, PROMOTE AND MAINTAIN THE CULTURE AND HERITAGE OF THE CAUVERY DELTA.'

K. Vedamurthi

ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு கருவேலி கோவில் அறக்கட்டளை சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்புரை

குருர் ப்ரம்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேச்வர:
குருஸ் ஸாக்ஷாத் பரம்ப்ரம்ம
தஸ்மை ஸ்ரீ குரவே நம:

பாரதத் திருநாடாம் இந்த ஞானபூமியிலே, ஆன்மீகம் தழைக்கும் ஞான ஆலயங்கள் நிறைந்த தமிழ்நாட்டிலே, தெய்வமணம் கமழும் குடவாசல் வட்டத்திலே அமைந்துள்ள கருவேலி கிராமப் பெரு மக்களும், நிர்வாகிகளும், ஸ்ரீ சர்வாங்க சுந்தரி ஸமேத ஸ்ரீ சற்குணேச்வர ஸ்வாமி ஆலய பரம்பரை தர்மகர்த்தா வி. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அவரது குடும்பத்தாரும்,

கயிலைநாதன் பிரத்யட்சமாகக் குடி கொண்டிருக்கும் கயிலாயமலைக்குச் சமீபத்தில் புனித யாத்திரை சென்று தரிசித்தவரும், நாடெங்கும் ஆன்மிகம் தழைக்க அயராது உழைத்து வருபவரும், சமுதாயத்திலே எல்லா தரப்பினருக்கும் தெய்வபக்தி போய்ச் சேர வேண்டும் என் பதற்காகக் கண் துஞ் சாது பாடுபட்டு வருப வருமான காஞ்சி காம கோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

அவர்களை நமஸ்கரித்து வரவேற்பதை பெரும் பாக்கியமாக கருது கிறோம்.

★ ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் விஜயம்

பொன்னனைய மனமும், பொற்பாதங்களும், பூவான ஹ்ருதயமும் கொண்டு நம் மக்கள்பால் ஆறாத அன்புடன் இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளுக்கு எங்களுடைய சிரம் தாழ்ந்த நமஸ்காரங்கள்.

மிகப் பழமையானதும், பல்வேறு அதியற்புத தெய்வீக நிகழ்ச்சிகள் நடந்ததும், அழகே உருவான கோஷ்ட தேவதைகள் நிறைந்ததும், உலகில் 'குணமே பிரதானம்',

என மக்களுக்கு எடுத்துச் சொல்லவென்றே 'சற்குணேசுவர'ராக அந்த அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகன் குடி கொண்டிருப்பதும், கருணையே உருவான அன்னை சர்வாங்க சுந்தரி எனும் திருநாமம் கொண்டு ஆட்சி புரியும் மாட்சிமை கொண்டதுமான இக் கோயிலுக்குத் தாங்கள் வருகை தந்து எங்களையெல்லாம் மட்டில்லாத மகிழ்ச் சியில் ஆழ்த்திவிட்டீர்கள்.

பாரத புண்ய பூமியில் தங்கள் திருப்பாதங்கள் பட்டுப் பெருமையடைந்த ஊர்கள் எத்தனை எத்தனயோ! மாட்சிமை பெற்ற கோயில்கள் எத்தனை எத்தனையோ! விளக்கொளி இழந்து நின்ற ஆலயங்கள் தங்களின் தெய்வீகப் பணியால் மீண்டும் சாந்நித்யம் பெற்றன.

தங்கள் திருமுகம் கண்டு மீண்டும் புத்துணர்ச்சி பெற்ற எத்தனையோ ஊர்மக்கள் தங்கள் தங்கள் ஊர்களில் மீண்டும் பக்திக்கு வித்திட்டனர். ஆலயப் பணியும், சமூகப் பணியும் ஒன்றையொன்று பின்னி நிற்கச் செய்தவர்கள் தாங்கள்.

'மக்கள் பணியே மகேசனுக்குச் செய்யும் பணி'

எனும் தங்களின் கட்டளையை ஏற்று நாடெங்கும் பக்திக் கனவோடு சமூகத் தொண்டு செய்து வரும் இளைஞர்கள் ஆயிரம், ஆயிரம் பேர்!

மேகமாக மூடி நின்ற அஞ்ஞான இருளை தங்கள் அமுதமொழிகளால் விலக்கி ஞானபானுவாக ஆன்மிக மக்களுக்கு ஆற்றல் அளித்தீர்கள்; ஊக்கம் கொடுத்தீர்கள்!

உங்கள் அருளால், உங்கள் வாக்கால், உங்கள் உந்துதலால் இன்று நாங்கள் எல்லோரும் பக்தியெனும் ஊற்று பெருகப் பெருக அன்பு மழையில் நனைகிறோம். தெய்வீகத்தின் ஆற்றலை உணருகிறோம்.

தங்களால் இன்று சமயம் பொலிகிறது.
தங்களால் இன்று இமயம் உயர்கிறது.
தங்களால் இன்று எங்கள் கோயில்
'உமை'யும் மகிழ்கிறாள்!

ஆம். இன்று இந்தக் கருவேலி கிராமமே உங்களின் தெய்வீக ஒளியால் நிரம்பப் பெற்றது. சற்குணேச்வரரும், சர்வாங்க சுந்தரியும் அம்மையும் அப்பனுமாக மகிழ்ந்து எங்களைக் கருணைக் கடலில் ஆழ்த்துகிறார்கள்.

உதய ஞாயிறாக,
ஆன்மீக எழுச்சியாக,
ஞானச் சுடராக
எங்களை வாழ்விக்க
வந்த அருட்கடலே!

தங்களைக் கருவேலி கிராம மக்களும், கோயில் நிர்வாகிகளும், கோயில் பரம்பரை தர்மகர்த்தா வி. கிருஷ்ணமூர்த்தியும் அவர் குடும்பத்தாரும் தண்டனிட்டு வணங்கி வர வேற்கிறோம்.

"ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர"
இந்த வரவேற்பு மடலைத் தங்கள் பாதார
விந்தங்களில் சமர்ப்பிக்கிறோம்.

ஸ்வாகதம்: ஹே! குரோ!

கருவேலி திருக்கோவில்
1.7.99

சிலிர்க்க வைக்கும் உண்மைகள்

கருவேலி கிராமத்தில் புதுப்பிக்கப்பட்டு, விளங்கும் ஸ்ரீ ஸற்குணேச்வரர் கோவிலுக்கு வர வேண்டும் என்ற அழைப்பை ஏற்றுக் கொண்டு என் வழக்கப்படி என் அபிமான தேவதையின் அனுமதிக்காக அவளை தியானித்தேன். முக்கடல் பாதங்களை வருடக் குமரி முனையில் கோயில் கொண்டுள்ள அக் குமாரி பிரத்யட்சமாகி கருவேலிக் கோயிலைப் பற்றி ஒரு பெரும் வரலாற்றினையே அளித்தாள். அவள் விளக்கிய பேருண்மைகள் பின்வருமாறு!

கருவேலி இன்று நேற்று தோன்றிய கோயிலன்று. திட்டமாக 3500 வருடங்களுக்கு முன் இக்கோயில் அத்ரி, கச்யபர் அனுக்ரஹம் பெற்ற ஒரு அந்தணரின் தவ வலிமையால் தோன்றியது. மனத்துள்ளே கண்டபடி குறிப்பிடப்பட்ட அளவுகள்படி மதில்கள், பிரகாரம், கருவறை முதலியவைகளை அவர் ஊரார் ஒத்துழைப்புடன் அமைத்தார். வேதம் முற்றுணர்ந்த அவர் வித்யாநாதன் என்றே அழைக்கப்பட்டார்.

குமாரி கண்முன் அக்கோயிலையே அக்காலத்தில் இருந்தபடி கொண்டு நிறுத்தினாள். கோயில் மதில்கள் வட்ட வடிவத்தில் இருந்தன. இப்போதுள்ள கோவிலின் வெளி மதிலிலிருந்து ஒவ்வொரு மதிலின் நடுவிலிருந்தும் ஒரு 24 அடி லம்பம் வரைந்து அவற்றின் முனைகளை வட்டவடிவில் இணைத்தால் அதுவே அன்றைய கோயிலின் வெளிப் பிரமாணம். கோயிலுக்கு நான்குபுறமும் ராஜகோபுரம். மூலஸ்தான விமானம் கஜப்ருஷ்டம் என்ற அமைப்பில் இருந்தது.

பிரதிஷ்டை ஷடாதாரம். ஒவ்வொரு ஆதாரத்திற்கும் இடையில் தங்கம், வெள்ளி, நவரத்னங்கள் மணலுக்கு மேல் இருந்தன. ஆதார லிங்கத்தின் பீடத்தின் ஆதாரம் குமாரியின் கூற்றின்படி தாந்த்ரத்திலிருந்து வேறுபட்ட வைதீக ஷடாதார பிரதிஷ்டை ஒழுங்குமுறையைச் சார்ந்து இருந்தது. ஒவ்வொரு ஆதாரத்திலும் பஞ்சாட்சரத்தின் ஒரு எழுத்து. மேல் பீடத்தில் அக்னி ஜ்வாலை போன்று செதுக்கப்பட்ட வடிவத்தின் நடுவே பஞ்சாட்சர ஆரம்ப பீஜமான ப்ரணவம்.

இது அதோமுக மந்த்ர வின்யாஸம் எனப்படும். கோயிலே மண்மூடி மறைந்தாலும், தெய்வத்தின் சைதன்யம் அணுவளவுகூட மங்காது. இதுவே அதோமுக வின்யாஸத்தின் சக்தியாகும். 3500 வருடங்களாக இப்படியேதான் இருந்து வருகிறது. குமாரியின் கூற்றுப்படி இந்த வின்யாஸத்தில் பிரதிஷ்டையாகியுள்ள பரமேச்வரனை தரிசிப்பதாலேயே மாசுகள் அகலும். துயர்கள் ஒழியும். செல்வம் கொழிக்கும். மோட்சம் கிட்டும். மோட்சம் அடையும்வரை கவலைகளற்ற வாழ்வு கிட்டும்.

ஸர்வாங்க ஸுந்தரி பராசக்தியே. சிவனின் ஒரு பாகமாகத் திகழ்பவள். அன்றே தனியாகக் கோயில் கொண்டவள். அவளை எங்கிருந்து நினைத்தாலும், அவள் அருள் கிட்டும். அழகும், அருளும் அவளுடைய இணைபிரியாத தகைமைகள்.

அக்காலத்தில் கோயிலைச் சுற்றி ரம்யமான சோலையும் கோயிலின் ஈசான்ய பாகத்தில் புஷ்கரணியும் இருந்தது. கோயிலுக்கும் சோலைக்கும் வெளியே மாலைபோல் நதி ஒன்றும் ஓடிக் கொண்டிருந்தது.

கோயில் வட்ட வடிவம், அதைச் சுற்றியுள்ள சோலையும் வட்ட வடிவம். அதற்கு அப்பால் உள்ள பெருவட்டத்தில் ஐந்து அக்ரஹாரங்கள் இருந்தன. கோயில் இருந்த இடம் இரத்தின பூமி. மஹாஸர்ப்பங்கள் மனிதர்கள் கண்ணுக்குத் தெரியாமல் க்ஷேத்திரத்தின் காவலர்களாகப் பணி புரிந்தன.

கோயில் க்ஷீணதசையடைந்தபோது ஸர்ப்பங்கள் கண்ணுக்குத் தெரிந்தே சஞ்சரித்தன. வயது ஆக ஆக ஸர்ப்பங்களின் உடல் குறுகி, பெருக்கும். படம் பெரிதாக விரியும். அப்படிப்பட்ட ஸர்ப்பம் ஒன்றை இப்போது திருப்பணி செய்யும்போது கண்டதாகக் கூறுவது இதற்குச் சான்று.

தென்னாட்டின் தொன்மையான அழியாத சைதன்யம் உள்ள பரமேச்வரனின் திருக்கோயில்களில் கருவேலி கோயிலும் ஒன்று. மற்றவை பஞ்சபூதங்களான காஞ்சி, காளஹஸ்தி, ஜம்புகேசுவரம், திருவண்ணாமலை, சிதம்பரம் இதைத் தவிர சொக்கநாதர் உறையும் மதுரை ஆலயம்...

பல கோயில்கள் உள்ள கும்பகோணத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கருவேலிக் கோயிலுக்குச் சென்று வழிபடுவதால் கும்பகோணத்தில் உள்ள எல்லாக் கோயில்களையும் தரிசித்த பலன் கிட்டும். கொடுப்பினை உள்ளவர்கள் சற்குணநாதனை தரிசிப்பர், இப்பேற்றினைப் பெறுவர், என்று நான் கூறவில்லை. குமாரி கூறுகிறாள்.

கருவேலி ஆலயம்

ஸ்ரீ வித்யாநாதன் அக்காலத்தில் மிராசுதார். அவர் மந்த்ரம், வேதம், சாஸ்த்ரம் இவற்றினை விளக்கும் 54 கிரந்தங்கள் இயற்றியவர். அவருக்கு நல்ல சங்கீத ஞானம் இருந்தது. அவர் கோயிலில் தேவி சந்நிதியில், வடமொழியில் தான் இயற்றிய பாடல்களைப் பாடும்போது அவருக்கு நாரதர் தரிசனமளித்தார். அவர் தேவியைப் பற்றி எழுதிய தியான சுலோகமாவது.

"த்யாயேத் தேவீம் ஸ்மிதாஸ்யாம் ப்ரபல மணி கணாலம்ப
மாலாம் ததானாம்
ஸௌந்தர்யாக்ருஷ்டகாந்தாம் கலதமன க்ருதே சம்பு
வாமஸ்த பாதாம்
லீலா கீராக்ய ஜீவம் ஸ்ருதி பய சகிதம் லாலஸ்யந்தீம் கரேண
ப்ரார்த்யம் ஸஞ்சோதயந்தீம் விதி லிபிதிமிரம் நாசயந்தீம் விசித்ராம்

இதன் பொருள்—

"புன் சிரிப்புத் தவழும் முகத்தினள். ப்ரபலமான ரத்னங்களால் அமைந்த மாலையினை அணிந்தவள், துஷ்டர்களை ஒடுக்கும்போது பரமசிவனின் இடது காலாக விளங்குபவள்.

அவள் கையில் உள்ள கிளி ஜீவனைக் குறிக்கும். ஜனன மரணத்தைக் கண்டு அஞ்சும் ஜீவனை அவள் காப்பாற்றுகிறாள் என்பதைக் கையில் கிளியை

வைத்துக்கொண்டு கொஞ்சுவதாக இங்கு வர்ணிக்கப்படுகிறது. ப்ரார்த்யம் என்றால் விரும்புபவை யாவையுமே. அதை நிறைவு செய்பவள் அவளே. அப்படி நிறைவு செய்யும்போது ஜீவர்களின் தலையெழுத்து எனும் பிரம்ம லிபியெனும், இருட்டினை அவள் அகற்றுகிறாள். அந்த விசித்திரமான தேவியை தியானித்தல் வேண்டும்.

குமாரி இப்படி விவரணம் அளிக்கையில் என் கண்முன்னால் ஸர்வாங்க ஸுந்தரியின் சிலையைக் காட்டி அதை அழகிய தேவியின் உருவமாக மாற்றியும் காட்டினாள்.

“நன்றாக அடங்கிய மனத்துள் தியான தேவையாக அவள் எழுவாள். நீ பெற்ற தரிசனம் எல்லோருக்கும் இந்த தியான சுலோகத்தை ஆவ்ருத்தி செய்வதால் கிட்டும்” இது குமாரியின் அருள்வாக்கு.

முதல் 15 தலைமுறையில் ஶ்ரீ ஶ்ரீநிவாஸ சர்மா என்ற ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு விஷ்ணு இஷ்ட தேவதை. குல தெய்வம் கருவேலிப் பரம சிவன். லிங்கத்தில் விஷ்ணுவை ஆவாஹனம் செய்து ருத்ரத்தாலும் புருஷ ஸூக்தத்தாலும் அபிஷேகம் செய்வார். சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பொருந்தக் கூடிய நாமாவளி ஒன்றை இயற்றி அர்ச்சனை செய்வார். அந்த நாமாவளியை ஆலயத்தின் வடப் பிரகாரக் கற்சுவரில் செதுக்கி வைத்திருந்தார். அவருக்குப் பின் 650 ஆண்டுகளில் ஆலயம் ஜீர்ணமடைந்த

** தேவி சர்வாங்க சுந்தரி*



பின் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது இந்த அர்ச்சனையைச் செதுக்கியிருந்த கல் என்ன காரணத்தாலோ சிதைந்து விட்டது.

இராஜேந்திர சோழன் ஆலயப்புனர் நிர்மாணம் செய்தபோது முந்திய வட்ட வடிவ அமைப்பு நீண்ட சதுரமாக மாற்றப்பட்டது. ஆனால் சோலையும் நதியும் வட்டவடிவமாகவே அமைந்திருந்தன தென் கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு திக்கில் மாலையாகச் சென்ற நதியின் போக்கு வடக்கு நேர்கோட்டில் கிழக்கு வந்து கிழக்காகவே கடலை அடையலாயிற்று. இதனால் சோலைகள் மேற்கிலும், வடக்கிலும் மட்டுந்தான் நிலைத்தன. மற்ற பக்கத்தில் உள்ள சோலைகள் மறைந்து போயின. சோலைகள் மறைந்த இடத்தில் புற்று பல எழுந்தன. ஜாதி ஸர்ப்பங்கள் அங்கு குடியிருக்கலாயின.

* கன்னியாகுமரி அம்மன்

அப்போது ஸ்ரீ வித்யாநாத பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ கோபால கிருஷ்ண சர்மா ஸங்கர்ஷண வித்யை மூலம் கோயிலுக்கு ஸேவார்த்திகள் பயமின்றி வந்துபோக வகை செய்தார். அவர் பயின்ற "ஓம் நமோ அவ்யக்த்தாய அனந்தாய ஸங்கர்ஷணாய நம" என்ற மந்த்ரத்தைத் தன் சந்ததியினருக்கும், சீடர்களுக்கும் உபதேசம் செய்தார். ஸர்ப்ப பயமின்றி இருக்க அந்த மந்த்ரம் உதவியது. நாளா வட்டத்தில் அது புழக்கத்தில் இல்லாமல் போய் மறைந்தது. இப்போதுள்ள குடும்பத்தினரின் பிதாமகரின் பிதாமகரின் தாத்தாவின் தாத்தாவின் தந்தை ஸ்ரீ ராம க்ருஷ்ண சர்மா ராம பக்தர். அவருக்கு ஸ்ரீ லட்சுமணர் ப்ரத்யக்ஷம். லட்சுமணர் மூலமாக மறுபடியும் ஸங்கர்ஷண மந்த்ரத்தைப் பெற்று அதை ஆராதனையில் உபயோகித்தபோது மூலஸ்தான லிங்கத்திற்கு ஸர்ப்பம் படமெடுத்துக் குடை பிடித்ததைப் பலர் கண்கூடாகப் பார்த்தனர். அவர் பூஜை செய்யும்போது மட்டும் ஸர்ப்ப தரிசனம் கிட்டியதேயொழிய மற்ற நேரங்களில் லிங்கம் எப்போதும் போல்தான் இருந்தது.

ஒருதடவை ஸ்ரீராமகிருஷ்ண சர்மா ஸ்ரீராமாயண நவாஹ பாராயணம் செய்தபோது, பாலகாண்டத்தில் வாமன சரித்திரத்தை வாசிக்கும்போது பலிச்சக்ரவர்த்தி வாமனருக்கு மூவுலகங்களையும் தாரை வார்த்த காட்சி தெரியலாயிற்று. அக்காட்சி மறைந்த இடத்தில் தற்போது உள்ள வாமனாவதாரச் சிற்பம் செதுக்கப்பட்டது. சிற்பி செதுக்கும்போது அதேபோன்ற சிற்பம் சிதைந்த நிலையில் இருந்ததும் தெளிவு பெற்றது. அச் சிற்பம் அதன் மேல் இப்போது தெரியும் சிற்பம்.

ஸ்ரீராம கிருஷ்ண சர்மா ஒரு காலை வேளையில் 4 மணிக்கு ஒரு கனவு கண்டார். கனவில் முன்னால் குறிக்கப்பட்ட ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சர்மா தோன்றி சிவனை விஷ்ணுவாகத்தான் பாவித்ததால் இருவருக்கும் பொதுவான "ராமர்"

என்ற தெய்வத்தினை மதிக்கும் வகையில் முதற் குழந்தைக்கு ராமன் என்ற பெயர் வைக்கலாமே என்று சொல்லி மறைந்தார். அப்போது அல்லாது பின்னால் ஒரு தலைமுறையில் ராமன் என்ற பெயர் மூத்தவனுக்கோ மற்றவனுக்கோ வைக்கலாயினர்.

அப்படி ராமன் என்று பெயர் கொண்ட ஒருவர் தேவியை ரகஸியமாக மனத்துள் ஆராதித்து வந்தார். திருக்கோயில் சீரமைப்பின்போது ஒளி ஒன்று தோன்றி தேவியின் பிம்பத்தில் ஐக்யமானது அதனால்தான். பிம்பத்தில் ஒளி தோன்றியதைக் கண்டவர் இருவர். ஒருவர் ஸ்ரீ ராமசர்மா மற்றவர் அப்போதைய பூஜகர். இதற்கு விசதீகரண தரிசனம் என்று பெயர். அதாவது ஸாந்நித்யம் உறுதியானதைத் தெரிவிக்கும் வெளிக் குறிப்பே அது. ஆசாரம், அன்னதானம், ஆராதனை இவற்றின் முதிர்ச்சியால் பெரியவர் வாங்கி அளித்த பெரும்பேறு என்று இதை அறிந்து கொள்ள வேண்டும்.

ஸ்ரீ த.வே. அனந்தராமசேஷன்

★★★

ஸ்ரீ த.வே. அனந்தராம சேஷன் இந்து நாளிதழ்களில் 22 வருடங்கள் உதவி ஆசிரியராக பணிபுரிந்தவர் அவருடைய இஷ்ட தெய்வம் முக்கடலும் சந்திக்கும் இடத்தில் உள்ள பகவதி கன்னியாகுமரி. மந்திர ஜபத்தால் ஈர்க்கப்பட்டு கன்னியாகுமரி ஒவ்வொரு இரவும் மணி 11.00 மணி முதல் 1.30 மணி வரை சாக்தம் பற்றி விளக்கி வருகிறாள். அவளுடைய அருளால் அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் அவர் குமாரியை ஜோதிர் பாலவாக பிரதிஷ்டை செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் மீனம்பாக்கத்திற்கு அருகில் உள்ள நங்கை நல்லூரில் உத்திர குருவாயூரப்பனை பிரதிஷ்டை செய்துள்ளார். சமீபத்தில் கருவேலி சர்வாங்க சுந்தரி பக்தர்கள் அவரை அத் திருக்கோயிலின் இரண்டாவது வருட குடமுழுக்குக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அபிஷேகத்தை பார்த்துக் கொண்டிருந்தபோது சுப்ரபாத செய்யுள்கள் அவள் அருளால் இயற்ற முடிந்தது. சென்னை திரும்பிய பிறகு இரண்டு இரவுகளில் அத்திருக்கோயிலின் வரலாறு பற்றிய இதுவரை அறிந்திராத உண்மைகளைத் தேவி அவருக்கு உணர்த்தினாள்.



திருக்கருவிலிக்கொட்டிட்டை

இத்தலம் திருவீழிமிழலைக்கு மேற்கே 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பூந்தோட்டம் புகைவண்டி நிலையத்திலிருந்து மேற்கே 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. பூந்தோட்டத்திலிருந்து நாச்சியார்கோயில் வழியே செல்லும் பேருந்துகளில் சென்று கூந்தலூரில் இறங்கி அரிசிலாற்றுப் பாலத்தைக் கடந்து வடக்கே 1 கிலோ மீட்டர் தூரம் சென்றால் இத் தலத்தை அடையலாம். கூந்தலூரில் பேருந்து நிற்குமிடத்தில் கருவிலி செல்லும் வழியையும் இத்தலப் பெருமையையும் குறித்த பெயர்ப்பலகை உள்ளது. ஆடுதுறையிலிருந்து வடமட்டம் வரை பேருந்தில் வந்து பரவாக்கரை என்னும் ஊர் வழியாகத் தெற்கே 5 கிலோ மீட்டர் தூரம் சென்றாலும் இத் தலத்துக்கு வரலாம். கருவிலி என்பது ஊர்ப் பெயர். கொட்டிட்டை என்பது கோயிற்பெயர். கருவிலி என்னும் பெயர் கருவேலி என்று மருவி வழங்கப்படுகிறது.



★ *மரத்தின் வேரோடிய மதில்*

தலப்பெருமை: திருநாவுக்கரசர் அருளிய திருக்குறுந்தொகைப்பதிகம் ஒன்றைப் பெற்று விளங்குவது. தேவாரப்பாடல் பெற்ற காவிரித்தென் கரைத் தலங்களில் 63வது தலம். பிறவிப் பிணி தீர வேண்டிச் சற்குணன் என்ற மன்னன் வழிபட்டு அருள்பெற்ற தலம். கருவிலி என்பதற்குப் பிறவிப் பிணி தீர்க்கும் பெருமான் உறையும் தலம் என்பது பொருளாகும்.

பிணித்த நோய்ப் பிற விப்பிரி வெய்துமாறு
உணர்த்த லாமிது கேண்மின் உருத்திர
கணத்தி னார்தொழு தேத்தும் கருவிலிக்
குணத்தி னான்உறை கொட்டிட்டை சேர்மினே.

என்பது இத்தலத் தேவாரம். இந்திரன் முதலான தேவர்களும் உருத்திரகணத்தவர்களும் வழிபட்டு அருள்பெற்ற சிறப்புடையது என்பதை இத் தலப்பதிகம் குறிக்கிறது. உலக மக்களை விளித்து அப்பர் அருளும் அரிய அறிவுரைகளைக் கொண்டுள்ளது இத்தலத் திருப்பதிகம்.

கோயில் மிகப் பழைமையானது. சோழ மன்னர்களும் பிறரும் செய்துள்ள கற் கோயில் என்பதை இங்குள்ள கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இத்தலத்தைச் சூழ மேற்கே நறையூர்ச் சித்தீச்சரமும், கிழக்கே, திருவீழிமிழலையும், வடகிழக்கே திருவன்னியூரும் திருநல்லமும் உள்ளன.

கோயிலமைப்பு: இத்தலத்திருக்கோயில் மிகப் பெரிதாக ஒரு காலத்தில் விளங்கி இன்று சுருங்கிய நிலையில் காணப்படுகிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. அம்பிகையும்



* புதுப்பிக்கப்பட்ட பின் கோவில் மதில்

தனிக் கோயிலில் சுவாமிக்கு இடது பாகத்தில் கிழக்கு நோக்கி விளங்கு கின்றார். வெளிப் பிராகாரம் முற்றிலும் பழுதடைந்துவிட்டது. எதிரே எமதீர்த்தம் உள்ளது. வெளிப்பிரா காரத்தில் விளங்கிய நந்தி பலி பீடங் களைக் கடந்து கட் டைக்கோபுர வாயில் வழியாக முதற்பிரா காரத்தை அடை வோம். முதற்பிரா காரத்தில் சுவாமி சந் நிதியின் இருபுறமும் தனகணபதியும், பாலமுருகனும் விளங்குகின்றனர்.

கோயிலை வலம் வரும்போது கன்னிமூலையில் தலவிநாயகர் கோயில் மட்டுமே உள்ளது. முருகன் மகாலக்ஷ்மி கோயில்கள் இல்லை. கர்ப்பக்கிருகம் சீர்திருத்தம் செய்யப்பட்டு வானளாவ உயர்ந்து விளங்குகிறது.

வலமாகவந்து சுவாமி சந்நிதியை அடைவோம். மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், அர்த்த மண்டபங்கள் திருத்தம் செய்யப்பட்டு அழகுற விளங்குகின்றன. ஸ்நபன மண்டபத்தில் நந்தி பலிபீடங்கள் உள்ளன. சுவாமி சந்நிதியில் துவார விநாயகர், துவார பாலகர்கள் உள்ளனர். விக்ரகங்கள் பழுதடைந்துள்ளன.

சுவாமி அருள்மிகு சற்குண நாதேசுவரர் பெரிய சிவலிங்கத் திருஉருவில் காட்சி தருகிறார்.

மட்டிட்ட குழலார் சுழலில்வலைப்
பட்டிட்டு மயங்கிப் பரியாதுநீர்
கட்டிட்ட வினைபோகக் கருவிலிக்
கொட்டிட்டையுறைவான் கழல் கூடுமே

என்று அப்பர் அருளிய தேவாரப் பாடலை ஓதி வழிபட்டு மீள்வோம். பஞ்சமூர்த்திகள் மற்றும் உற்சவ விக்ரகங்கள் அனைத்தும் பாதுகாப்புக்காக வேறு கோயில்களில் வைக்கப்பட்டுள்ளன.

சுவாமி திருக்கோயில் கோஷ்டங்களில் தெற்கே அர்த்தநாரீசுரர், தக்ஷிணா மூர்த்தி, வடக்கே பிர்மா, துர்க்கை, பைரவர் திருவுருவங்கள் தரிசிக்கத்தக்கவை. வடக்குப்பிரா காரத்தில் சண்டேசுவரர் கோயில் தனியே உள்ளது.

வடக்குப்பிராகாரத்தில் உள்ள வாயில் வழியாக அம்பாள் கோயிலை அடை வோம். அம்பிகை தனிக்கோயிலில் விளங்குகின்றாள். மிகப் பெரிய திருவுருவம். பிராகாரம் பழுதடைந்துள்ளது. கர்ப்பக்கிருகம் சுவாமி கோயில் விமான அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டு உயர்ந்து காணப்படுகிறது. விமான கலசம்

இல்லை.

அம்பாள் சந்நிதியின் முன் மண்டபத்தை அடைவோம். வாயிலில் விநாயகர் விளங்குகின்றார். அம்பிகை அருள்மிகு சர்வாங்கநாயகி புருஷ ஆகிருதியோடு விளங்குகிறார். அழகிய திருவுருவம்.

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலமன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலைவிட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடஞ் சேர்பவளே.

என்ற பாடலை ஓதி வழிபடுவோம். அம்மன்கோயில் மண்டபத்தில் மகாபலிசக்ரவர்த்தி உருவம், தேவாரம் அருளிய மூவர் திருவுருவங்கள், முருகன், பைரவர், சூரியன் திருவுருவங்கள் உள்ளன. அம்பாள் திருக்கோயிலின் வாயில் இடிந்துள்ளது. தேவாரப்பாடல் பெற்ற சிறந்த இத்தலம் பழுதடைந்துள்ளது கண்டு நம்மனம் பதைப்புறுகிறது. இக்கோயிலின் திருப்பணிகள் விரைவில் நிறைவேறிப் புதுமைத் திருக்கோலம் கொள்ள இறைவனை வேண்டி வழிபட்டு மீள்வோம்.

மூர்த்திகள்: இறைவன் திருப்பெயர் அருள்மிகு சற்குண நாதேசுவரர், அம்பிகை திருப்பெயர் அருள்மிகு சர்வாங்கநாயகி. இக்கோயிலில் உள்ள நர்த்தனவிநாயகர், அர்த்தநாரீசுவரர், தக்ஷிணாமூர்த்தி, பைரவர், முருகன் திருவுருவங்கள் பழமையும் கலைச்சிறப்பும் உடையவை. இத்தலத்து சுவாமி அம்பாள் விமானங்கள் தனி அமைப்பையும் அழகையும் உடையனவாய் விளங்குகின்றன.

கல்வெட்டுக்கள்: இரண்டாம் இராசாதிராசன் காலத்து நான்காம் ஆண்டுக் கல்வெட்டு, இவ்வூரை உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் குலோத்துங்க சோழ நல்லூராகிய கருவிலிக்கொட்டிட்டை என்று குறிக்கிறது.

★★★

திருக்கயிலாயப் பரம்பரை தருமையாதீனம் 26ஆவது குருமகா ஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசண்முக தேசிக ஞான சம்பந்தப் பரமாச்சாரிய சுவாமிகள் திருவுள்ளப் பாங்கின் வண்ணம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தில் வெளியிடப்பட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்டது.



கருவேலி கிராமமும் கோவிலும்

★ நிற்கும் கோலத்தில் கணபதி

வடமட்டத்திலிருந்து மூன்று கிலோ மீட்டர் தெற்கே சென்றால் 'கரிவேலி' அல்லது 'கருவேலி' என்ற கிராமம். நாச்சியார்கோயிலிருந்து வந்தால் கிழக்கே ஆறு மைல். இங்கிருந்து இரண்டரை மைல் வடகிழக்கே கோனேரிராஜபுரம் இருக்கிறது. வடமட்டத்திலிருந்து முட்டையாற்றின் வடிகாலைக் கடந்து கரிவேலிக்குச் செல்ல வேண்டும். அண்மையில் பெருகிய வெள்ளத்தில் அந்தக் கிராமம் இடுப்பளவு தண்ணீரில் இரண்டு, மூன்று நாட்கள் மூழ்கியிருந்ததாம். நாங்கள் சென்றபோது வெள்ளம் அரித்த பாதையைச் சீர் செய்துகொண்டிருந்தார்கள்.

அது பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று. அப்பர் தேவாரத்தில் 'கருவிலி' என்றும் 'கொட்டிட்டை' என்றும் குறிக்கப்பட்டுள்ளன.

'உய்யு மாறிது கேண்மி
னுலகத்தீர்
பைகொள் பாம்பரை யான்
படை யார்மழுக்
கையினானுரை கின்ற கருவிலிக்
கொய்கொள் பூம்பொழிற் கொட்டிட்டை சேர்மினே!

நில்லா வாழ்வு நிலைபெறு மென்றெண்ணிப்
பொல்லா வாறு செயப் புரியாதுநீர்
கல்லா ரும்மதிள் சூழ்தண் கருவிலிக்
கொல்லே றூர்பவன் கொட்டிட்டை சேர்மினே!

இறைவன் பெயர் சற்குண நாதர், இறைவி ஸர்வாங்க நாயகி. தலவிருட்சம் வில்வம். இந்திரனும் தேவர்களும் பூஜித்த தலம். சற்குணம் என்ற அரசன் வழிபட்டு நற்கதியடைந்த தலம். 'உருத்திர கணத்தினார் தொழுதேத்தும் கருவிலி' என்கிறார் அப்பரடிகள் தமது பதிகத்தில்.

★ அர்த்த நாரீஸ்வரர்

ஊருக்கு சற்குணேச்வரம் என்ற பெயரும் உண்டு.

பழைய கோயில், மொட்டைக் கோபுரம், செடிகள் மண்டிக் கிடக்கும் பெரிய மதில் சுவர்கள் அங்கங்கே இடிந்து போயிருக்கின்றன. சுவாமி கோயிலுக்கு வடக்கே அம்பாள் கோயில் தனிப் பிராகாரத்துடன் விளங்குகிறது. பெரிய லிங்கம், பெரிய அம்பாள், ஆறடி உயரமிருக்கும். திருப்பணி தொடங்கப்பட்டிருக்கிறது. விமானங்கள் வேலை முடிந்து, மற்றவையெல்லாம் அப்படியே நிற்கின் றன. யாருடைய முயற்சியில், எப்போது நிறை வேறப் போகிறதோ?

எதிரில் பெரிய திருக்குளம். புராணப்படி அது யம தீர்த்தம். அம்பாள் கோயில் மண்டபத்தில் சூரியன், சந்திரன், பாலசுப்ரமணியர், மூவர், மகாபலிச்சக்கரவர்த்தி (அர்ச்சகர் கூறியபடி) முதலிய வடிவங்கள் இருக்கின்றன.

பொதுவாகவே, இக் கோயிலிலுள்ள சிற்பங்களும் தெய்வச் சிலைகளும் கலையழகுடன் மிளிர்கின்றன. நின்ற கணபதி, அர்த்தநாரீச்வரர், தென்பிராகாரத்தில் உள்ள விநாயகர் எல்லாம் மிக நேர்த்தியான சிற்பங்கள். கவனிப்போ, பாது காப்போ இல்லாமல் இருக்கும் நம் புராதனக் கிராமக் கோயில்களில் இதுவும் ஒன்று.

★★★

''பரணீதரன்'' ''மெரீனா'' முதலிய புனை பெயர்களில் பல்லாண்டுகளாகத் தமிழ்த் தொண்டு செய்து வருபவர் திரு. ஸ்ரீதர் அவர்கள். தென்னிந்தியா முழுவதும் தல யாத்திரை செய்து தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள கோவில்களுக்கெல்லாம் அயராமல் சென்று ஈசுவரதரிசனம் செய்து கட்டுரைகள் எழுதியவர். ஆனந்தவிகடனில் இவருடைய கார்ட்டூன்கள் பளிச்சென்று கருத்தைத் தெளிவாகக் காட்டும்.

(நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஆனந்த விகடனில் வெளியான கட்டுரை)

சர்வலோக நாயகி!

அன்னை பராசக்தியாம் சர்வலோக நாயகியின் செளந்தர்யத்தில் மனம் ஒன்றிய மைந்தன் ஆதி சங்கரர் முதல் பகவான் ராமகிருஷ்ணர் வரை எத்தனை மகான்கள் ஆத்ம அனுபூதியைப் பெற்றிருக்கிறார்கள்! ஆயிரம் பெயர் கொண்டவளான அவளை எப்படி அழைத்தாலும் அவள் அழகின் நாயகி தான்! ஆனால் அவளே சுந்தரி – அதுவும் 'சர்வாங்கசுந்தரி' எனப் பெயர் தாங்கி நமக்கு அருள்பாலிக்கக் குடி கொண்டிருக்கிறாள் என்று சொன்னால் வேறு என்ன சிறப்பு வேண்டும்?

'கருவிலி' கிராமத்தில் உள்ள ஈசுவரன் கோயில் அதன் மகிமையாலும் புராணச் சிறப்பாலும் தல விசேஷத்தினாலும் அனைவரையும் ஆகர்ஷித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

அதுவும் இங்கு இப்போது திருப்பணிகள் நடந்து கொண்டு இருப்பதற்குக் காரணமான சம்பவம் ஆச்சர்யமானது. இவ்வூரில் ஒரு சிறிய ஆஞ்சநேயர் கோயில். இதனை வழிபட்டுக் கொண்டு இருந்த அன்பர் ஒருவர், இக் கோயிலுக்குக் கொஞ்சம் திருப்பணி செய்ய வேண்டும் என நினைத்தார். எனவே இவ்வூரைச் சேர்ந்த, இப்போது சென்னையில் வாழும் திரு. வி. வைத்தியநாதன் அவர்களை அணுகிச் சொன்னபோது "எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டிருக்கிறார். அவருக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. மூவாயிரம் என்று சொன்னவுடன் வைத்தியநாதன் கொடுத்திருக்கிறார். அதை வாங்கிச் சென்றவரிடமிருந்து எந்தத் தகவலும் இல்லை.



* ஆடிப்பூர அம்மன்

எனவே தன் உறவினரான கண்ணனை விசாரிக்கச் சொல்ல, அவர் கருவேலிக்கு விசாரித்துக் கொண்டு போய் இருக்கிறார். அந்த அன்பர், "மூணாயிரம் பத்தாது. திரும்பவும் எனக்குப் போய் கேக்க கஷ்டமா இருந்தது. அப்படியே அந்தப் பணத்தை வைத்திருக்கிறேன். இந்தாருங்கள்" என்றிருக்கிறார். கண்ணன் தங்கள் மூதாதையர் வாழ்ந்த அவ்வூரைப் போய்ப் பார்த்து அங்கிருந்த ஈசுவரன் கோயிலைப் பார்த்துப் பிரமித்துப் போயிருக்கிறார். அவர் வந்து சொன்னதைக் கேட்ட திரு. வைத்தியநாதனும் அவர் சகோதரர் பிரபல தொழில்துறை வல்லுனர் திரு வி. கிருஷ்ணமூர்த்தியும் சென்று பார்த்திருக்கிறார்கள். தங்கள் குடும்ப மூத்தவர் குழந்தை ஐயர் எனும் ராமய்யர் அவ்வூரில் பிரசித்தமாக வாழ்ந்த பெருமையும்,

அக்கோயிலின் ஆயிரம் வருடங்களுக்கும் மேலான பழைமையும் தெரியவந்தபோது மகிழ்ந்து போனார்கள். இப்பேர்ப்பட்ட கோயிலுக்குத் தங்களால் ஆனதைச் செய்ய வேண்டும் என இந்தச் சகோதரர்கள் தீர்மானித்தார்கள். திரு. வைத்தியநாதனும் திரு. கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து லட்சக் கணக்கில் செலவழித்து முழு மூச்சுடன் இன்று திருப்பணிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படியாக ஈசுவரன் இவர்களை இழுத்துத் திருப்பணியில் ஈடுபடுத்தி இருக்கிறார் போலும்! இத்தனைக்கும் காரணமான ஆஞ்சநேயரும் தனது கோயிலைச் சீர் செய்து கொண்டு விட்டார்!

'கருவிலி' என்பது "இனி ஒரு தாயின் கருவிலே உதிக்க வேண்டாம்" எனும் படியான மோட்சத்தைக் கொடுக்கும் நிலை. நினைத்தாலே முக்தியளிக்கும் திருவண்ணாமலை போல, கருவிலி கொட்டிட்டைக் கோயிலில் குடி கொண் டிருக்கும் சற்குணேசுவரரைத் தரிசித்தால் மறுபிறவி இல்லையென்பதாம். அதற்கெனவே கோயிலின் எதிரில் யம தீர்த்தமே உள்ளது.

சற்குணன் எனும் அரசர் சிறந்த சிவபக்தனாக இருந்து இக்கோயில் ஈசு வரனைத் தொழுது முக்தி பெற்றான். அவன் பெயரால் சற்குணேச்வரன் என இறைவன் அழைக்கப் பெற்றான் என்கிறார்கள். 'கருவிலி'யைச் சுற்றியுள்ள எட்டுத் திக்கிலும் கோனேரி ராஜபுரம், வள்ளியூர், திருவீழிமலை, திருவாஞ்சியம், கூந்தலூர், துர்க்காட்சி அம்மன் குடி, அம்பாச்சிபுரம் ஆகிய தலங்கள் புராண, வரலாற்றுத் தொடர் புடைய ஊர்கள் இருக்கின்றன.

* கருவேலியில் கும்பாபிஷேக வைபவங்களுக்குக் காரணமாக இருந்த ஆஞ்சநேயர் கோவில்

திரிபுரம் எரித்த பிரான் ருத்ர தாண் டவம் ஆடியதாகவும் சிவபெருமான் ஆடிய நடனங் களிலே ஒருவகை கொட்டிட்டை என வும், அதனையே ஈசன் இங்கு தாண்ட வமாக ஆடினார் என்பதும் செவி வழிச் செய்தி. அத னால்தான் இந்தத் தலத்தை அப்பர் தன் பதிகங்களிலே 'கரு விலிக் கொட் டிட்டை' என்றே குறிப்பிடுகிறார். இப்படி மிகப்பழம் பெருமை வாய்ந்த இக் கோயில் சமீபகாலமாக மிகவும் க்ஷீணமான நிலையில்தான் இருந்தது. நாங்கள் போனபோது வெகு வேகமாகக் கும்பாபிஷேகத்திற்குத் தயாராகிக் கொண்டு இருந்தது.

இத்தனைக்கும் காரணமான ஆஞ்சநேயரைத் தரிசித்து ஊருக்குள் சென்று

ஈசுவரன் கோயிலுக்குள் அடியெடுத்து வைத்தோம். வாசமணக்கும் கதம்பத்திலே எந்த மணத்தை ரசிப்பது! கலை மணக்கும் சோழ நாட்டில் எந்தக் கோயில் அழகில்லை! அதுவும் இங்கு சுற்றுப்பிரகார கோஷ்டங்களிலே இருக்கிற தெய்வ மூர்த்தங்கள்... ஒவ்வொரு தெய்வமும் அப்படி ஒரு தீர்க்கமான அமைப்புடன், வனப்பும் கலைவண்ணமுமாக மிளிர்கிறார்கள். கோயில் கோபுரம் தாண்டி உள்ளே சென்றால் இருபுறமும் கணபதியும், முருகனும். பிறகு தட்சிணாமூர்த்தி, பிரம்மா, துர்க்கை என பார்த்துக்கொண்டே நிற்கலாம் போலிருக்கிறது.

கருவிலிப் பேற்றைத் தரும் சற்குணேச்வரனைத் தரிசிக்கிறோம். சத்துவ குணமே மோட்சத்தைத் தருகிறது. மோட்சத்திற்கு மட்டும் சாத்வீகக் குணம் தேவை என்றில்லை. இன்றைய நிலையில் வன்முறையும், ஒழுக்கக் கேடுகளும் நிறைந்து போன நிலையில் சாத்வீகம்தான் சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டும். அதனை அருளுபவராக சற்குணேச்வரர் விளங்குகிறார். சமுதாய நலனுக்காக இனியாவது மக்களைத் தீயவினைகளிலிருந்து காப்பாற்றுங்கள் என வேண்டித் தொழுது வெளியே வருகிறோம்.

அம்மனுக்கு என பிரகாரம் தாண்டி, தனிக் கோயில். சன்னதி உள்ளே சென்றபோது தான் பிரமித்து நின்றோம். எப்பேர்ப்பட்ட அம்மன்! பெயரும் 'சர்வாங்கசுந்தரி' இதழ்க்கடையில் விரிக்கும் புன்சிரிப்பில் மனம் கொள்ளை போகிறது. ஐந்தடிக்கும் மேலான அத்தனை பெரிய அம்மன் அபூர்வமான காட்சி. பாலாலயம் வைத்துப் பூஜித்து வந்ததால் விசேஷமான அலங்காரம் இல்லாத நிலையிலும் அப்படி ஒரு தெய்வீகம் அங்கு குடி கொண்டு இருக்கிறது.

"அப்பல்லாம் நாங்க மார்கழி மாசமானா காலையில் ஊரைச் சுத்தி பஜனை பாடி இங்க வந்து சேருவோம். இந்த அம்மன் மேலேயே நிறைய பாட்டுங்க இருக்கு. அதையெல்லாம் பாடிக்கிட்டு வருவோம்'' என்கிறார்கள் அங்கிருந்த கோதண்டபாணி, பக்கிரிசாமி, நடேசன் எனும் வயதானவர்கள்.

"அந்தப் பாட்டுங்கள்ள ஒண்ணு பாடுங்களேன்!'' என்றபோது

"சர்வலோக நாயகி, சர்வாங்க சுந்தரி
சாட்சா சாரணி, சாயுஜ்ய ரூபிணி
நானும் உனக்குத் தொண்டு
நாளும் புரியவும் கண்டேன்
நமனை விரட்ட வழி
நவிலுவோம் அதற்கென்று''

என்று வயோதிகக் குரலில் நினைவு படுத்திப் பாடியது சுருக்கமாக அந்த ஊரின் வரலாறையே கூறுவதாக இருந்தது.

"இந்த அம்மன் ரொம்ப சக்தி வாய்ந்த அம்மனுங்க. நிறையப் பெண்கள் வேண்டுதல் நிறைவேறி இருக்குங்க. குறிப்பா கல்யாணம் ஆகாதவங்க, குடும்பப் பிரச்னை காரணமாக வருத்தமா இருக்கிற பெண்கள் இங்க வேண்டிக்கிறப்ப நிறையப் பிரச்னைகள் தீர்ந்து போயிருக்கு. பெண்கள் வேண்டிகிட்டு வேண்டுதலை நிறைவேத்தி இருக்காங்க. இந்தக் கோயில் பழைய நிலைக்கு வர்றதைப் பார்க்கும்போது சந்தோஷமா இருக்கு'' என்கிறார்கள் இவ்வூரைச் சேர்ந்தவர்கள்.

திருப்பணி என்று வரும்போது கோயில் திருப்பணிகளில் ஆர்வமுள்ள பன்னீர்செல்வம், ஸ்தபதி எம்.எஸ். சிவப்ரகாசம், முன்னாள் கர்ணம்

இராமதுரை முதலியவர்கள் மிகவும் சிரத்தையுடன் செய்து வருகிறார்கள். இக் கோயிலின் ஈ.ஓ.வான கே. ராஜகோபால் ஹெச்.ஆர். அண் சியில் திருப் பணிக்காக அனுமதி வாங்கிக் கொடுத்து, இங்கே அடிக்கடி வந்து தன் பெரும் பகுதி நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறார். உள்ளூர்க்காரர் மதி வாணனோ தன் செல்வாக்கினைப் பயன்படுத்திக் கோயிலுக்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்கிக் கொண்டு இருக்கிறார்.

"இவ்வூர்க்காரர்கள் இக்கோயில் திருப்பணிக்காகத் தரும் ஒத்துழைப்பு பெரிய விஷயம். இங்கே மிகச் சின்ன சாமான் கடை இருக்கிறது. அதன் உரிமை யாளர் சாதாரண நிலையில் இருப்பவர்தான். அவர்கூட, திருப்பணிக்காக அங்கேயே தங்கி வேலை செய்பவர்களுக்கு அந்த வாரம் பணம் வர லேட் டானால்கூட "நீங்க சாமான் வாங்கிக்குங்க. அப்புறமா பணம்தாங்க." என்கிறார். அந்த அளவிற்கு அன்பும் அக்கறையும் வைத்திருக்கிறார்கள்." என்கிறார்கள் திருப்பணிக் குழுவினர்.

'ஊர் கூடித் தேர் இழுத்தல்' என்பார்கள். அப்படி மிகப் புராதனமான, அற்புதமான மகிமைகளைக் கொண்ட திருக்கருவிலி கொட்டிட்டை சற்குணேசுவரரின் கோயில் புதுப் பொலிவுடன் மாறி வருகிறது. சர்வாங்கசுந்தரி தன் இரண்டு கைகளிலும் அட்சமாலை, தாமரை மலர் தாங்கி மற்றும் இரு கரங்களால் அபயம் அளித்து வரமளிக்கும் தெய்வீகப் பொலிவுடன் திகழ்கிறாள். 'அவள் அருளாலே அவள்தாள் வணங்கி' இகபர வாழ்வில் அன்பும் அருளும் பெறுவோம்.

மஞ்சுளா ரமேஷ்

மங்கையர் மலர் ஏப்ரல் 1997

★★★

மங்கையர் மலர் சஞ்சிகையின் ஆசிரியரான திருமதி மஞ்சுளா ரமேஷ் ஆன்மீகம், லௌகிகம் இரண்டையும் பற்றிக் கட்டுரைகள் எழுதி வருகிறார். தோழமை உணர்வோடு அவர் தெரிவிக்கும் கருத்துக்களை வாசக அன்பர்கள் மிகவும் ரசித்துப் படித்துப் பயனடைகிறார்கள்.



இணைபிரியா அழகுகள்

கும்பகோணத்திலிருந்து அரிசலாற்றங்கரையோடு செல்லும் சாலையில் பசுமைச் சூழலை ரசித்துக்கொண்டே சில கிலோமீட்டர்கள் போனால் கருவேலி என்ற ஒரு குக்கிராமத்தை அடையலாம். அது இன்று திருவிழாக் கோலம் பூண்டிருக்கிறது. சுற்று வட்டாரத்து கிராம மக்களெல்லாம் வண்டி கட்டிக் கொண்டு குடும்பம் குடும்பமாக வந்து சேர்கிறார்கள். திடீர்க் கடைகளும் தண்ணீர்ப் பந்தல்களும் தோன்றியுள்ளன. அனைவரது முகங்களிலும் பெருமிதப் பூரிப்பு காணப்படுகிறது.

காரணம் என்ன என்று விசாரித்தால் தங்கள் மண்ணின் மைந்தர்கள் பற்றிய பெருமிதம்தான் என்று தெரிய வருகிறது. வைத்தியநாதன், கிருஷ்ண மூர்த்தி என்ற சகோதரர்கள் எங்கோ சென்னையிலும் புதுதில்லியிலும் குடியேறியிருந்தாலும் சொந்தக் கிராமத்தை மறவாமல் அங்கு சிதிலமான கோயிலுக்குத் திருப்பணி செய்து கும்பாபிஷேகமும் நடத்தி வைக்க முன் வந்தார்கள்.

கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்க திருவாவடுதுறை இளைய சந்நிதானம் சீர்மிகு காசி விசுவநாத தேசிகர் வந்திருக்கிறார். யாகசாலையில் முறைப்படி எல்லா யக்ஞுங்களும் நடந்து முடிந்து, அபிஷேக தீர்த்தத்தைத் தலையில் சுமந்து கோயிலை வலம் வந்து கோபுரத்தின் மேல் சாரங்கள் வழியே ஏறுகிறார்கள். இனிய நாதசுவர இசை வெயிலைக்கூட மறக்கச் செய்கிறது. 'ஹர ஹர மகாதேவா'' என்ற பக்தர்களின் பரவச கோஷத்துக்கிடையில் கலசாபிஷேகம் நடக்கிறது.

கோயில் பிராகாரம், கோபுரம் எல்லாம் புதுக் கருக்குடன் பளிச்சிடுகின்றன. இத்தனை சிறப்பாகத் திருப்பணியை நடத்திக் கொடுத்திருக்கும் சிவப் பிரகாச ஸ்தபதியை வாழ்த்தாதவர்கள் கிடையாது. 'இவர் ஸ்ரீரங்கம் ராஜ

★ *இணை பிரியா இறைவனும் இறைவியும்*

கோபுர திருப்பணியையே நடத்தி வைத்தவராக்கும்' என்று பேசிக் கொள் கிறார்கள்.

பணம் வசூலித்து விடலாம்; ஸ்தபதி வந்து திருப்பணியை மேற் பார்வையிட்டு நடத்திக் கொடுத்து விடலாம்; ஆனால் ஊர் மக்கள் ஒத்து ழைப்பு இன்றி என்ன செய்துவிட முடியும்? அவர்கள் ஒரு கணிச மான தொகையைத் தாங்களே திரட்டித் தந்தது பெரிய விஷய மல்ல; திருப்பணி நடந்து முடிந்த கோயிலை நன்கு பராமரித்து நித்திய பூஜைகள், உற்சவங்கள் எல்லாம் குறைவின்றி நடத்தி வருவதாக உத்தரவாதம் அளிக்கிறார்கள்.



★ சிவமும் சக்தியும்

கும்பாபிஷேகம் காண வந்தவர்களை விழுந்து விழுந்து உபசரிக் கிறார்கள். பக்கத்துக் கூந்தலூர் கிராமத்தில் இரண்டு மூன்று வீடுகளில் தொடர்ந்து நாலைந்து நாட்களுக்கு மூன்று வேளையும் விருந்துபசாரங்கள்!

எங்கேயிருந்து பெற்றார்கள் இந்த நற்குணத்தை என்பது சுவாமி சந்நிதியில் நுழைந்ததுமே புரிந்து போகிறது. சற்குணம் என்பது எவ்வளவு பரந்து உயர்ந்தது என உணர்த்தும் விதமாக சற்குணநாதர் நெடி துயர்ந்து கம்பீர சிவலிங்கமாகக் காட்சி தருகிறார். அம்மன் பெயர் அதைவிட அழகானது; சர்வாங்கசுந்தரி. புற அழகும் அக அழகும் இணைபிரியாதிருக்க வேண்டும் என்று உணர்த்துவது போன்று அம்பாளும் இறைவனும் திருப்பெயர் பூண்டிருக்கிறார்கள்.

கருவேலி என்று இன்று அழைக்கப்படும் கருவிலி கிராமத்தின் புராதனப் பெயர் கொட்டிட்டை என்பதாகும். சிவபெருமான் ஆடுகின்ற பலவித நடனங்களில் கொடு கொட்டி நடனம் என்பதும் ஒன்று. அப்போது சில ஆபரணங்கள் சிதறி இங்கு விழுந்ததாகவும் புராணக் கதை உண்டு. தட்சயக்ஞத்துக்குப் பிறகு தேவி பரமசிவனை மீண்டும் கவர்வதற்காக உலகின்

சகல அழகுகளையும் தன்னிடம் கிரகித்துக் கொண்டு இங்கு வந்து தவமிருந்து தன் நோக்கத்தில் வெற்றி பெற்றதாக மற்றொரு தல வரலாறு. கருவறையில் சர்வாங்க சுந்தரியின் நெடிய எழிலுருவம் இந்தக் கதைக்குச் சாட்சியாக நிற்கிறது.

சற்குணநாதர் உறையும் இத்தலத்தில் இரண்டு தலைமுறைகளுக்கு முன்னால் ஒரு பெரியவர் இருந்தார். அவர் உள்ளத்தை உணர்ந்து, அதற்கேற்ப 'குழந்தை ஐயர்' என்று ஊர் மக்கள் அன்புடன் அழைத்தார்கள். நிலம், நீச்சு என்று இருந்தபோதிலும் வருமானத்தைப் பெரும்பாலும் அன்னதானத்துக்கே செலவிட்டார். பரம பக்தராக விளங்கி, மேரு ஸ்தாபித்து பூஜித்து வந்தார். அவர் காலத்துக்குப் பிறகு இந்த மேருவை பரமாச்சாரியாள் தருவித்து காஞ்சிபுரத்திலேயே ஸ்தாபிக்கச் செய்தார் என்பது குழந்தை ஐயரின் பெருமையை உணர்த்தும்,'அவர் அன்னதானம் செய்து முடித்த பிறகு ஊர்க் குளத்தில் நெய் மிதக்கும்' என்று இன்றும் கருவேலி கிராம மக்கள் சொல்கிறார்கள். சாப்பிட்டு விட்டுக் கையலம்புவதால் நெய் மிதக்குமெனில் எத்தனை உயர்ந்த உணவு படைத்தார் என்பதை நமது ஊகத்துக்கு விடுகிறார்கள்! இந்தக் குழந்தை அய்யரின் பேரன்கள்தாம் இன்று கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்தி வைக்கும் வைத்தியநாதன், கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள் என்பதில் ஊர் மக்களுக்கு நியாயமான பெருமிதம்.

சற்குணேசுவரரின் அருள் நம் அனைவருக்குமே உண்டு. தரிசித்து வணங்கிப் பெறுவோம்.

கி. ராஜேந்திரன்,

நிர்வாக ஆசிரியர், கல்கி (13.4.97)

★ ★ ★

கல்கி பத்திரிகையின் நிர்வாக ஆசிரியரும் சிறந்த எழுத்தாளருமான திரு. ராஜேந்திரன் தந்தை 'கல்கி'யின் கொள்கைகளை இன்றளவும் கடைப் பிடித்து வருகிறார். தேச நலனுக்காகவே பத்திரிகைகள் நடத்தப்பட வேண்டும் என்ற உறுதியுடன் கல்கி பத்திரிகையை நடத்தி வருகிறார்.

நமது கடமை

தமிழகத்தின் பல பகுதிகளில் மிகப் பழமையான கோயில்கள் சிதைந்து வருகின்றன. புராதன சின்னங்களாக விளங்கும் கோயில்கள் கவனிப்பாரற்று காலவெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட் டால், பண்டையத் தமிழகத்தின் நாகரிகமும் ஆன்மீக உணர்வும் மறைந்து போகும் அபாயம் உள்ளது.

எனினும் பழைமையான கோயில்கள் ஒரு சில புதுப்பிக்கப்பட்டு வருவதும், கும்பாபிஷேகம் நடத்தி மீண்டும் வழிபாட்டுக்குரிய தலங்களாக மாறி வருவதும் புது நம்பிக்கையை ஊட்டுகிறது.

குடவாசல் தாலுகாவிலுள்ள சற்குணேச்வரர் கோயில் மிகப் பழைமையானது. இது போன்ற பல கோயில்கள் இந்த பகுதிகளில் கவனிப்பாரற்று கிடக்கின்றன. கோயில் மதில் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுகள், இந்தக் கோயிலின் வரலாற்றை நமக்குத் தெளிவுறுத்துகின்றன.

சற்குணேச்வரர் கோயிலும் பராமரிப்பு இல்லாமல் கோயில் கோபுரங்கள், சுவர்களில் புதர்கள் மண்டியும் இடிபாடுகளுடனும் இருந்தது. அப்பர் பெருமானால் போற்றிப் பாடப்பட்ட கோயில்களில் இக்கோயிலும் ஒன்று என்பது சிறப்பான செய்தியாகும்.

★ பைரவர்

அரச வம்சத்தைச் சேர்ந்த சற்குணன் என்பவன் இத்திருத்தலத்தில் கடவுளை வழிபட்டு வாழ்வின் உண்மை தெளிந்தான் என்று கூறப்படுகிறது. அதன்பிறகு இத்திருத்தலம் சற்குணேச்வரம் என்று அழைக்கப் பெற்றது.

தருமபுரம் ஆதீனத்தில் உள்ள நூல்களில், இக்கோயிலில் இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் மற்றும் ருத்ரகணங்கள் வழிபட்டுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

மிகப் பழமையான இக்கோயில் சோழர்களால் பராமரிக்கப்பட்டு வந்ததை இங்குள்ள கல்வெட்டுக்களால் அறிகிறோம். ஆனால் உண்மையில் இக்கோயிலைக் கட்டியவர் யார் என்ற செய்திகள் ஆராயப்படவில்லை. கல்வெட்டுக்களை மொழி பெயர்த்து இக்கோயிலின் வரலாற்றை நிறுவ வேண்டும்.

திருவீழிமிழலையில் இருந்து மேற்குப் பகுதியில் 6 கி.மீ தொலைவில் உள்ளது கருவேலி. பூந்தோட்டம் ரயில் நிலையத்தில் இருந்து பத்து கி.மீ. தூரத்தில் இவ்வூர் அமைந்துள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில், சென்னை கபாலீச்வரர் கோயில் போன்ற புகழ் பெற்ற கோயில்களைப் புதுப்பித்துத் தந்த ஸ்தபதி சிவப்பிரகாசம் இக்கோயிலை

புதுப்பித்துள்ளது மற்றொரு சிறப்பான விஷயமாகும்.

"இப்பொறுப்பை ஏற்றவுடன் கோயிலைச் சுற்றிப் பார்த்தேன். கோயிலில் ஒன்றும் இல்லை. கோபுரங்கள், மதில் சுவர்களில் புதர்கள் மண்டி கிடந்தன. மேலும் பல பகுதிகள் இடிபாடுகளுடன் காணப்பட்டன. அத்துடன் நிறைய பாம்புகள் கோயிலில் மறைந்திருந்தன." என்று ஸ்தபதி சிவப்பிரகாசம் குறிப்பிட்டார். மிக மோசமான நிலையில் இருந்த இக்கோயில் தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுகிறது.

சற்குணேச்வரர் கோயில் கிழக்குத் திசை பார்த்த நிலையில் அமைந்துள்ளது. அம்மன் சர்வாங்கசுந்தரியின் கோயில் தனியாக அமைந்துள்ளது. உயரமாக வடிவமைக்கப்பட்ட அம்மன் சிலை எழிலுடன் கிழக்குப் பார்த்த நிலையில் உள்ளது.

கோயிலில் நுழைபவர்கள் நுழைவாயிலின் இருபுறமும் தனகணபதி மற்றும் பாலமுருகனைக் காணலாம்.

இதேபோல், புதுப்பிக்கப்பட்டுள்ள மகாமண்டபம், அர்த்தமண்டபம் போன்றவை காண்போரை வியப்பில் ஆழ்த்தும் வகையில் உள்ளன. மூலஸ்தானத்தின் அருகில் துவார விநாயகர் மற்றும் துவார பாலகர்கள் உள்ளனர்.

கோயிலின் தென்பகுதியில் அர்த்தநாரீஸ்வரர், வடபகுதியில் தட்சிணா மூர்த்தி, பிரம்மா, துர்க்கை, பைரவர் ஆகியோருக்குத் தனித்தனிக் கோயில்கள் அமைந்துள்ளன.

வடக்குப் பிரகாரத்தில் சண்டிகேசுவரர் மாடம் உள்ளது. அம்மன் மண்டபத்தில் மகாபலி சக்கரவர்த்தி, முருகன், பைரவர் சிலைகள் உள்ளன. மண்டபங்களில் காணப்படும் கல்வெட்டு ஒன்று, இரண்டாம் ராஜாதி ராஜன் காலத்தைச் சார்ந்ததாக உள்ளது.

அழகிய நிலையில் புதுப்பிக்கப்பட்ட இக்கோயிலில் தற்போது நான்கு கால பூசைகள் நடைபெறுகின்றன.

கோயிலின் புதிய சுற்றுச் சுவர், பிரகாரம், விமானங்கள், கோபுரங்கள் ஆகியவை புதுப்பொலிவுடன் தற்போது விளங்குகின்றன.

இன்னும் பல கோயில்கள் இந்தப் பகுதிகளில் அழிந்து வருகின்றன. அவற்றை புதுப்பித்து வழிபாட்டுத் தலங்களாக மாற்றி நம் புராதன சின்னங்கள் அழியாமல் காக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தினமலர்
29.4.97

* ஸ்ரீதுர்கை

கருவேலி திருக்கோயில்

கல்கி வைத்தியநாதனும் நானும் நீண்ட கால நண்பர்கள். திரு. வைத்தியநாதன் அதிர்ந்து பேச மாட்டார். அளவோடுதான் பேசுவார். ஒருசொல் அதிகப்படியும் இராது. குறைவாகவும் இராது. சுபாவமோ பச்சை வாழைப்பட்டை.

இவருடைய சகோதரர்தான் டில்லிவாழ்தொழில்நுட்ப வல்லுனர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி. பல ஆண்டுகளுக்கு முன் திருச்சி பெல் தொழிற் சாலையின் அதிபராக இருந்து அரும்பெரும் சாதனைகள் புரிந்தவர். இருபத்து மூன்று ஆண்டு காலமாக ஓடாமலிருந்த திருவாரூர் தேரை கலை ஞர் தம்முடைய ஆட்சிக் காலத்தில் ஓட வைக்க முயற்சி எடுத்தபோது, அந்தத் தேருக்கு ஸ்டீல் சக்கரங்களும் பிரேக்கும் பொருத்தி ஓட வைத்த சரித்திரப் பெருமைக்குரியவர்.

வைத்தியநாதன் – கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள் பிறந்து வளர்ந்து விளையாடிய திருத்தலம்தான் கருவேலி எனும் சின்னஞ்சிறு கிராமம். மிக மிகச் சின்ன ஊர். இங்கே விரிந்து பரந்து ஓங்கி நிற்கும் ஆலயமோ மிகப் பெரிது. இந்தச் சின்ன ஊரில் இத்தனை பெரிய கோயிலா என்று வியக்கத் தோன்றும். கருவேலி கிராமம் ஒரு கத்தரிக் காய் அளவு என்றால் இந்தக் கோயில் ஒரு பூசணிக்காய் மாதிரி!

★ சம்வத்ஸராபிஷேகம்

ஆயிரத்து நானூறு ஆண்டு பழைமை யான அப்பர் சுவாமி களின் தேவாரப்பதி கம் பெற்ற திருக் கோயில். காஞ்சி காம கோடி பரமாசாரியார் இந்தக் கிராமத்தில் ஆறு மாத காலம் முகாமிட்டு சுற்றுப்புற கிராமங்கள் அத் தனைக்கும் திக் விஜ யம் செய்து வந்திருக் கிறார். அப்போது இந்தக் கோயிலில் பூஜை செய்வாரின்றிக் கிடந்த மேரு வைப் பார்த்துவிட்டு அதைத் தம் கையோடு எடுத்துச் சென்று காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத்தில் வைத்து தினப்படி பூஜை நடை பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்.

''எங்கள் கருவேலி கிராமத்துக்கு ஒருமுறை வந்து அங்கே எழுந் தருளியுள்ள சர்குணேசுவர – சர்வாங்கசுந்தரியைத் தரிசித்து விட்டுப் போக

வேண்டும்'' என்று நண்பர் வைத்தியநாதன் சொன்னபோது ''எங்கே இருக்கிறது உங்கள் கருவேலி கிராமம்?'' என்று கேட்டேன்.

''கும்பகோணத்திலிருந்து பூங்குளம் செல்லும் வழியில் சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது . அந்தக் கோயிலை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும்'' என்றார்.

இடிபாடுகளுடன் புதர் மண்டிக் கிடந்த கோயிலைப் பல லட்சங்கள் செலவு செய்து ஜீர்ணோத்தாரணப் பணிகளை ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் செய்து முடித்திருக்கிறார்கள் வைத்தியநாதன் சகோதரர்கள். இப்போது கோவிலைப் பார்க்கும்போது புதுப்பிக்கப்பட்ட கோவில் மாதிரியே தெரியவில்லை. புத்தம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவில்போல் புதுப் பொலிவுடன் காட்சி தருகிறது.

கோயிலுக்குள் ஐந்தரை அடி உயரத்தில் 'நின்ற கோல'த்தில் காட்சி தரும் தேவியின் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. நகை நட்டு எதுவும் இல்லாமலே கொள்ளை அழகாய், சௌந்தர்ய தேவதையாய் ஒளி வீசுகிறாள் சர்வாங்க சுந்தரி. 'எந்தத் திருத்தலத்திலும் காண முடியாத இத்தனை அழகு இந்த தேவிக்கு மட்டும் எப்படி வந்தது?

தட்சயக்ஞத்துக்குச் சென்ற தேவி திரும்ப வரும்போது கணவரைக் கவர்வதற்காக உலகத்தின் அத்தனை அழகுகளையும் தன்னிடம் ஒருங்கே சேர்த்துக் கொண்டு சர்வாங்க சுந்தரியாக சர்குணேசுவரர் முன் வந்து நின்றாராம் இந்தப் பேரழகி. அந்த அழகில் மயங்கிய ஈசுவரனுடைய கோபம் விலகிப் போனதில் சற்றும் வியப்பில்லைதானே!

✷ முருகப் பெருமான்

கோயில் சிதிலமாகி, மரங்கள் வளர்ந்து கோயிலையே ஜீர்ணம் செய்து விட்டிருந்த தோற்றத்தை வீடியோ படமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். இடிந்து போன கோயில் கட்டிடக் கற்களைப் பெயர்த்தெடுத்து பழையபடியே ஆகம விதி முறைப்படி கட்டி முடித்து பளபளப்பாக வண்ணம் தீட்டி மிகச் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள் கருவேலி மக்கள்.

கும்பாபிஷேகம் நடந்து ஒன்றரை ஆண்டு காலம் ஆகிறது. இப்போது அந்தக் கிராமம் மேலும் சுபிட்சமாக உள்ளதென்று ஊர் மக்கள் மகிழ்ச்சியோடு சொன்னார்கள்.

கோயிலுக்குள் பிரவேசிக்கும்போதே வாயிலின் இரு புறங்களிலும்

விநாயகரும் முருகனும் தரிசனம் தருகிறார்கள். இந்த இரு சகோதரர்களையும் வைத்தியநாதன், கிருஷ்ணமூர்த்தி சகோதரர்கள் எனக்கு தரிசனம் செய்து வைத்து "சிலைகள் எத்தனை அழகு பார்த்தீர்களா?" என்று பெருமை பொங்கக் கேட்டார்கள்.

கோயிலை வலமாகச் சுற்றி வரும்போது தென்திசை வெளிச்சுவரில் அர்த்தநாரீசுவரர் சிலை உள்ளது. அழகு, அழகு! – அழகென்றால் அப்படி ஒரு அழகு! பெண் பாகத்தில் பெண்மைக்குரிய சாமுத்ரிகா லட்சணங்கள்! 'அந்த நீள் விழியின் நளினத்தை எப்படித்தான் கல்லில் வடித்தார்களோ அந்தச் சிற்பிகள்?' என்று அதிசயித்துப் போகிறோம். ஆண்மைக்குரிய ஈசுவரனின் கண்ணுக்கும் பெண்மைக்குரிய உமையவளின் விழிகளுக்கும் எத்தனை வித்தியாசம்! அந்த நுட்பமான வித்தியாசத்தைக் கல்லிலே காட்டுவது எப்படி சாத்தியமாயிற்று!

நாங்கள் கோயிலைப் பார்க்கப் போனபோது கிராமத்து மக்களில் பெரும் பாலோர் அங்கே குழுமியிருந்தார்கள். ஊருக்குப் பெரியவரான நடேசனார் அந்த ஸ்தல சம்பந்தமான பாடல்களை பக்தி சிரத்தையோடு உரத்த குரலில் பாடியபடியே எங்களுடன் பிரதட்சிணம் வந்தார்.

பரிவட்ட சம்பிரதாயங்கள், தெய்வப் பிரசாதங்கள் எல்லாம் முடிந்ததும் திருமதி கிருஷ்ணமூர்த்தி அந்த ஸ்தல புராணத்தை விளக்கமாகச் சொன்ன தோடு ஓர் அதிசயத்தையும் குறிப்பிட்டார்.

"புதர் மண்டிக் கிடந்த அந்தக் காலத்தில் இந்த சந்நிதியில் அதோ அந்த வாயிற்படியில் வயதான பாம்பு ஒன்று எப்போதும் தெய்வத்துக்குக் காவலாகக் குறுக்கே படுத்துக் கிடக்கும். வயசாக ஆக அந்தப் பாம்பின் நீளம் குறைந்து குட்டையாகவும் பருமனாகவும் ஆகிவிட்டது. யாரையும் அது ஒன்றும் செய்ததில்லை. மக்கள் வரத் தொடங்கியதும் அது அந்த இடத்திலிருந்து மறைந்து விட்டது."



★ கோவில் கட்டட கற்களை பெயர்த்து எடுத்து வேர்களை நீக்கிய பின் மீண்டும் வைக்கப்பட்டது.

கிருஷ்ணமூர்த்தியின் மனைவி இந்த அதிசயத்தை விவரித்தபோது அந்தப் பாம்பே நம் எதிரில் வந்து நிற்பது போல் ஒரு பிரமை தோன்றியது.

"கோயிலுக்குள் நவக்கிரகம் கிடையாதா?" என்று கேட்டேன்.

"பொதுவாக யம தீர்த்தம் உள்ள இடத்தில் நவக்கிரகம் இருப்பதில்லை. அது ஏன் என்பதற்குக் காரணம் தெரியவில்லை. அதோ எதிரில் தெரிகிறதே,

ஒரு பெரிய குளம். அதற்கு யம தீர்த்தம் என்று பெயர் இப்போதுதான் அந்தக் குளத்தை ஆழப்படுத்தி, சுத்தப்படுத்தி அழகு படுத்திக் கொண் டிருக்கிறோம்'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

லட்சக்கணக்கில் தங்களுடைய சொந்தப் பணத்தைச் செலவழித்து கோயிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தியுள்ள கிருஷ்ணமூர்த்தியும் வைத்தியநாதனும் தங்களைப் பற்றி எந்த விளம்பரமும் கூடாது என்பதில் கண்டிப்பாக இருக்கிறார்கள். ஆனாலும் ஊர் மக்கள் அவர்கள் பெயர் பொறித்த சலவைக் கல் பலகை ஒன்றை கோயிலுக்குள் பதித்து வைத் திருக்கின்றனர்.

கோயிலைச் சுற்றிப் பல ஏக்கர் விஸ்தீர்ணத்துக்குக் கோயிலுக்குச் சொந்த மான நிலம் சூன்யமாய்க் கிடக்கிறது. "இங்கெல்லாம் தென்னையும் வாழையும் பயிரிட்டாலே போதுமே. கோயிலுக்கு நல்ல வருமானம் கிடைக்குமே!'' என்றேன்.

"அதையெல்லாம் செப்பனிட்டுப் பயிர் பண்ணுவது அத்தனை சுலபமல்ல. நிறையப் பணம் தேவை. அது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ திருப் பணிகள் பூர்த்தி பெறாமல் நிற்கின்றன. குருக்கள் சம்பளம்கூட கோயில் பணத்திலிருந்துதான் தர வேண்டியுள்ளது. இந்து அற நிலையத்திலிருந்து வர வேண்டிய ஆறு மாதச் சம்பளம் இன்னும் வந்தபாடில்லை. என்ன செய்வது? எங்களுக்கு எந்த உதவியும் இல்லையென்றாலும் நாங்கள் செய்யும் திருப்பணி எதுவாயிருந்தாலும் கேள்விகள் கேட்டு இடை யூறு செய்யாமலிருக்கிறார்களே, அதுவே பெரிய உதவிதானே!'' என்றார் கிருஷ்ணமூர்த்தி.

"இப்போது முக்கியமாக இந்தக் கோயிலுக்குத் தேவைப்படுவது நித்திய பூஜைக்கான பொருளாதாரம்தான். அது மட்டுமல்ல; பக்தர்கள் பெரும் கூட்டமாய் வர வேண்டும் என்பது எங்கள் அவா.'' திருவிழாக்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்துவதன் மூலமே பக்தர்களைக் கூட்ட முடியும்.

இப்போது ஏறத்தாழ முன்னூறு பேர் ஆளுக்கு மூவாயிரம் ரூபாய் நன் கொடை செலுத்தி நித்திய பூஜைக்கு உதவி வருகிறார்கள். ஒரு முழுநாள் பூஜைக்கான செலவுக்கு இவர்கள் தந்துள்ள பணத்தில் வட்டியாகவே கிடைத்து விடுகிறது. இந்தப் பணம் போதாது. இன்னும் நிறையச் சேர்த்தாக வேண்டும்.

"வடநாட்டிலிருந்து முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும்கூட மூவாயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஆண்டு தோறும் அவர்கள் பெயரில் குறிப்பிட்ட ஒருநாள் பூஜை செய்து கருவேலி அம்மனின் அருட்பிரசாதங்களைத் தவறாமல் அனுப்பி வைக்கிறோம்'' என்றார் வைத்தியநாதன்.

'சாவி' 22.10.98

★ ★ ★

முதுபெரும் எழுத்தாளரான 'சாவி' நகைச்சுவை சொட்டச் சொட்ட எழுதிய கட்டுரைகள் பிரஸித்தமானவை. அவர் கருத்துச் செறிவு நிறைந்த கட்டுரைகள் எழுதுவதிலும் சிறந்து விளங்கினார்.

காத்தருளும் கருவேலி தெய்வங்கள்

“தேவி! நான் மீண்டும் சொல்கிறேன்; அங்கு போகாதே!”

“ஸ்வாமி! மன்னியுங்கள். என் பிறந்த வீட்டிற்குத்தானே போகிறேன். அதுவும் தங்கள் பொருட்டே. தயவுசெய்து என்னைத் தடுக்காதீர்கள்!”

“எனக்கு அழைப்பில்லை; செய்யும் யாகத்திலும் அவிர்பாகம் இல்லை. இது எனக்கு அவமானமல்லவா? ஆகையால் நீ போனால் உனக்கு அவமானம். எனக்குச் சிறிதும் சம்மதமில்லை. வேண்டாம். நான் சொல்வதைக் கேள்!”

“அதையும்தான் பார்த்து விடுகிறேனே. தங்களுக்கு அவிர்பாகம் அளிக்காமல் நடைபெறும் யாகத்தைக் கட்டாயம் தடுப்பேன். என் பதி அவமானப் படுத்தப்பட்டால் நான் சும்மா இருப்பேனா? என் விஜயம் அவர்களுக்கு ஒரு பாடமாகவே அமையும். சரி, நான் வருகிறேன்.”

இப்படி மீண்டும் மீண்டும் இறைவன் பன்முறை கூறியும் தாக்ஷாயிணியோ சற்றும் மசிவதாக இல்லை. தன் தந்தை தக்ஷன், மிகக் கோலாகலமாக நடத்தும் அப்பெரும் வேள்வியைக் காணப் புறப்பட்டுவிட்டாள். யாகம் நடந்து கொண்டிருந்தது. இடையில் தாக்ஷாயிணி வந்ததைப் பலர் கவனிக்கவில்லை: அவளைக் கண்ட மாத்திரத்திலேயே கடுங்கோபம் கொண்ட தக்ஷன், அவளையும் ஈச்வரனையும் எல்லாரது முன்னிலையிலும் பலவாறு இகழ்ந்து பேசினான்.

அவனது கோபத்திற்குக் காரணம் இதுதான். ஒருமுறை தன் மகளைக் காண தக்ஷன், திருக்கயிலையை அடைந்தபோது வாயிலிலிருந்த சிவகணங்கள் அவனைத் தடுத்ததோடு மட்டுமல்லாமல் அவனைப் பலவாறு கேலி செய்தன. இதனால் அவமானம் அடைந்து தாக்ஷாயிணியைப் பார்க்காமலேயே தன் இருப்பிடத்தை அடைந்தான். அதற்குப் பழி வாங்க, விஷ்ணுவை யாகத் தலைவராக்கி, சிவனை அடியோடு புறக்கணித்து, அடிமட்டத் தேவர்களையும் அழைத்து வேள்வி புரியலானான். யாகத்திற்கு விஜயம் செய்த ததீசி முனிவர், சிவனுக்கு அழைப்பு விடுத்து அவிர்பாகம் அளிக்கும்படி பலவாறு எடுத்துக் கூறியும், தக்ஷன் மறுத்துவிட்டு, தன்னிஷ்டப்படியே யாகத்தை நடத்திக் கொண்டு போனான்.

அன்னை ஆத்திரம் கொண்டாள். பலர் முன்னிலையில் தன் நாயகன் அவமானப்படுத்தப் படுவதைக் கண்டு அவள் மனம் பொறுக்கவில்லை. சீற்றமடைந்த அவள், “இந்தக் கணம் முதல் நீ எனக்குத் தந்தையில்லை; உனக்கு நான் மகளும் இல்லை. உன் பெயரோடு சம்பந்தப்பட்ட தாக்ஷாயிணி என்ற இவ்வுடலையும் அழித்துக் கொள்கிறேன். உனக்கு மகளாகப் பிறந்த பாவம், இந்த ஹோம அக்னியில் என் தேகத்தை எரித்தால்தான் அகலும். இது யாகசாலை அன்று; பிணம் எரியும் சுடுகாடு!” என்று உக்ரமாகக் கூறிக் கொண்டே கொழுந்து விட்டெரியும் அக்னி குண்டத்தில் பாய்ந்தாள்.

அன்னையுடன் பாதுகாப்பிற்காக வந்த சிவகணங்கள், வெறி கொண்டு யாகசாலையைத் துவம்சம் செய்தன. இதற்கிடையில் ஒரு பூதம் தக்ஷன் தலையைக் கடித்து விழுங்கி விட்டது. பத்தினியான தாக்ஷாயணி அக்னியில் வீழ்ந்து மாய்ந்ததால் மகாஸதி என்ற நாமம் பெற்றாள்.

தாக்ஷாயிணியின் பிரிவைத் தாங்காத பரமன், கயிலையங்கிரியில் மிகச் சோக மாக இருந்தபோது, அவள் இறந்ததைக் கேட்டு ஆவேசமாக அந்த யாக தலத்தை அடைந்தார். குண்டத்திலிருந்த ஸதியின் உடலை எடுத்துத் தோளில் சுமந்து கொண்டு, பித்துப் பிடித்தவர்போல் ஆடத் தொடங்கி விட்டார். அரன் ஆட அவனி ஆட்டம் கண்டது. அண்ட சராசரங்கள் ஆடத் தொடங்கின. ஈரேழு லோகங்களும் அதிர்ந்தன, ஆடின.எதிர்பாராத இவ்வாட்டங்களால் எல்லாமே தடுமாறின. தேவர்கள் நடுக்கத் தோடு கலங்கினர். செய்வதறி யாது, இறுதியில் நாராயணனை அணுகி, தங்கள் இன்னல்களை எடுத்துரைத்தனர்.



★ நந்திகேசுவரர்

அவர்களது வேண்டு கோளைக் கேட்ட விஷ்ணு பக வான், தனது சக்கரமான சுதர் சனத்தை ஏவினார். சிவன் அவ ளைக் கொண்டு போகும் போது சக்கரம் அவரைத் தொடர்ந்து கொண்டே சென்று, ஸதியின் உடலைச் சிறிது சிறிதாகத் துண்டித்துக் கொண்டு சென்றது. சுதர்சனத் தால் துண்டிக்கப்பப்பட்ட ஸதியின் அங்கங்கள் நம் பாரத தேசத்தில் 51 இடங்களில் வீழ்ந்து மகாசக்தி பீடங்கள் என்று பிரபலமாயின. ஸதி மறைந்து விட்டதால் சிவனின் கோர தாண்டவம் நின்று போய் உன்மத்தம் பிடித்த வனைப் போல் தனியாக இருந்து வந்தார். தாக்ஷாயிணி உடலை விட்ட ஸதியோ பர்வ தராஜனின் புத்திரியாகப் பிறந்து பார்வதி எனப் பெயர் பூண்டாள்.

ஈசனின் தனிமைக் கோலத்தை அறிந்த பார்வதி, ஸர்வாலங்கார பூஷிதையாக, ஸர்வாங்கசுந்தரியாக அவர் முன் நின்றாள். அவ்வழகில் மனத்தைப் பறி கொடுத்த பகவான் சுயநிலை அடைந்து அவள் கைத்தலம் பற்றி மணந்துகொண்டார் எனப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய அழகிய சுந்தரியை இன்று நீங்கள் காண ஆவலாக இருக்கிறீர்களா? வாருங்கள். திருக்கருவேலி எனும் பெயர் பெற்ற

கருவேலி தலத்திற்கு. அங்கே குடிகொண்டுள்ள ஸர்வாங்க நாயகி அல்லது ஸர்வாங்க சுந்தரி என்ற நாமங்கள் பூண்டுள்ள அம்பிகை காண்போர் மனம் கவரும் வண்ணம், பார்ப்போர் மனம் பரவசம் அடையும் வண்ணம் சுடர்விடும் விளக்கெனப் பல ஆண்டுகளாகத் தரிசனம் அளித்து அண்டியவரை ஆதரித்து வருகிறாள்.

ஆதிசங்கர பகவத் பாதாள் இயற்றிய ஸௌந்தர்ய லஹரியில் அம்பாளின் அங்க லக்ஷணங்களைக் கோவையாகவும், மிக அழகாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர். அந்த வர்ணனைக்குரிய அங்கங்களைக் கொண்ட அதிரூப சுந்தரியைத் தரிசித்து நாம் உய்ய வேண்டாமா? இவ்வழகிய சிலையைக் கண்ட பின்பே ஆதிசங்கரர் ஸௌந்தர்ய லஹரி நூலை இயற்றினாரா, அல்லது அந்நூலை நுணுக்கமாகப் படித்த சிற்பி, அதில் கூறியபடி இச்சிலையை வடித்தாரா என்ற ஐயம் எவர் மனத்திலும் தோன்றுதல் இயல்பே! அவ்வளவு கொள்ளை அழகு!

இதோ இன்னும் ஓர் உபகதை.

தாரகாசுரன் குமாரர்களாகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்களும், சிவ பூஜா பலத்தால் பொன், வெள்ளி, இரும்பு என்ற பறக்கும் கோட்டைகளுடன் உலாவி தேவர்களை மிகவும் இம்சித்தனர். இறுதியில் தேவர்கள் யாவரும் சேர்ந்து அவ்வசுரர்களுக்குப் பலவரங்களை அளித்த அந்த ஈச்வரனையே சரணடைந்தனர். எம்பெருமான் ஒரு ரதம் கொண்டு வரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

சூரிய சந்திரர்கள் தேர்ச் சக்கரங்களாகவும், அஸ்தகிரியும் உதயகிரியும் இருசுகளாகவும் ஆயினர். மந்தரகிரி ரதமாக்கப்பட்டது. ஆகாயம் கொடு முடியாகியது. தாரகைகளும் தேவர்களும் தேரின் திரைச்சீலை மற்ற அலங்காரப் பொருள்களாயினர். விந்திய மலை குடையானது. பிரம்ம தேவன் கடிவாளம் ஏந்தும் சாரதியானார். பிரணவம் சாட்டையாக மாறியது. வேதங்கள் நான்கும் குதிரைகளாயின. மேரு மலை வில்லாக, வாசுகி அதன் நாணாக மாறின. சரஸ்வதி வில்லின் நுனியில் ஒலிக்கும் மணிகளாக விளங்கினாள். சிவ பெருமான் தேரில் ஆரோகணித்து வில்லைக் கையில் ஏந்தி, விஷ்ணுவைப் பாணமாக்கி எய்யத் தொடங்கினார். இதனால் கர்வம் அடைந்த நாராயணனைப் பங்கம் செய்ய, சிவபிரான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்த மாத்திரத்திலேயே அந்த முப்புரங்களும் அக்கணமே அசுரர்களுடன் சாம்பலாகி விட்டன.

இப்படி முப்புரங்களை எரித்த முக்கண்ணனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. உடனே ஒரு தாண்டவம் உதயமாயிற்று. அவர் மனத்தில் குதூகலம் பொங்கி வழிந்த போதிலும் பூமி அதிராமல் பாதங்களைத் தூக்கி மெதுவாக ஆடிய நளின ஆட்டம்! மார்பை அகல விரித்துக் கரங்களை பயங்கரமாகத் தூக்காமல் மெதுவாக மென் முத்திரைகளைக் காண்பித்து அசைந்தாடும் ஆட்டம்! நயனங்களால் கூர்மையாக உற்று நோக்கிக் குனிந்த கனிந்த காருண்யப் பார்வையுடன் ஆடிய ஆட்டம்! அதிலும் ஒரு மென்மை! இவ்வதிசய ஆட்டத்திற்கு தன்னிரு திருக்கரங்களால் தாளம் போட்டாள் அன்னை பராசக்தி. இந்த அபூர்வ அழகான நடனத்தையே சாணக் கியன் 'முத்ரா ராக்ஷஸம்' எனும் நூலில் வெகு அருமையாக வர்ணித்துள்ளான். இத்தகைய நடனத்திற்கு கொடுகொட்டி என்று பெயர். இதனால் நடனம் ஆடிய

இடம் கொட்டிட்டை எனப் பெயர் பெற்றது. அன்றைய புராதன கொட்டிட்டையே இன்றைய கருவேலி என்ற தலமாகும். இதையே அப்பர் சுவாமிகள்

'மட்டிட்ட குழலார் சுழலில் வலைப்
பட்டிட்டு மயங்கிப் பரியாது நீர்
கட்டிட்ட வினை போகக் கருவிலிக்
கொட்டிட்டை உறைவான் கழல் கூடுமே.

என்று அத்திருத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார். என்ன அருமையான பாடல்!

எல்லாத் தலங்களுக்கும் சென்று பாடியவர் அப்பர் பெருமான். 'நீர் கட்டிட்ட வினை போகக் கருவிலி கொட்டிட்டை உறைவான் கழல் கூடுமே' என்று மின்னல் வெட்டாய் சொற்சேர்க்கையில் அடைக்கிறார்.

வினை என்றால் கர்மம்; கர்மா. அதென்ன கட்டிட்ட வினை? ஜென்ம ஜென்மமாக நம்மை விட்டுப் பிரியாமல், நிழலாக ஒன்றித் தொடரும் வினைதான் 'கட்டிட்ட வினை'. எப்படி ஒரு பொருளைச் சார்ந்து நிழல் உறைகிறதோ அப்படி ஜீவனைச் சார்ந்தே தொடர்கிறது வினை. முன்பு செய்தது; இப்போது செய்வது எல்லாம் நீங்க ஒரு வழி உண்டு. அதுவே பரமனின் பாதார விந்தங்களைப் பற்றிக் கொள்வது. வினை அகன்றால் என்ன கிட்டும்? நீலகண்டனின் திருவடி நிழல் கிட்டும். அத்திருவடிகளைச் சார்ந்தால் பிறப்பு, இறப்பு என்ற சக்கரம் உடைபட்டுப் போகும். 'பிறவியிலாப் பெருநிலை' என்ற அபூர்வமான லட்சியம் கிட்டும். ஒவ்வொரு ஜீவனின் நோக்கமும் அதுதானே? அதையேதான் பளீரிடச் செய்கிறார் அப்பர்.

கருவேலி என்பதை கரு, இலி என்று பிரிக்கலாம். இத்தலத்திலுள்ள தெய்வங்களை வழிபட்டவனுக்கு, இனியும் ஒரு தாயின் கருவில் உருவாக வேண்டாம் எனும்படியான மோட்சத்தைக் கொடுக்கும்படியான வாய்ப்பு ஏற்படுமாம். நினைத்தாலே முக்தி அளிக்கும் திருவண்ணாமலை போல, கருவிலிக் கொட்டிட்டை கோயிலைக் கண்டவுடனேயே பிறவிக் கடலைத் தாண்டிவிடலாம். அவ்வளவு மகத்தான சிறப்பு! கருவிலி என்ற பெயரே தற்காலத்தில் கருவேலி எனறு மருவி விட்டது. சோழ வளநாட்டின் காவிரியின் தென்கரையில் உள்ள 66 தலங்களில் கருவேலியும் ஒன்று என்ற சிறப்பும் உண்டு என்பது சில ஆய்வாளர்கள் கருத்து. இந்த க்ஷேத்திரம் சற்குண ராஜனால் திருப்பணி செய்யப்பட்டதால் ஸற்குணேச்வர புரம் என்ற பெயரும் உண்டாம்.

கிராமத்தினுள் நுழையும்போதே வலப்புறத்தில் சிறிய ஆஞ்சனேயர் கோயில் உண்டு. சிவன்தான் அனுமானாக அவதாரம் எடுத்தார் என்பது சிலரது கருத்து. இதை உணர்த்தவேதான் அச் சிவத்தலத்தில் முதன்முதலில் ஆஞ்சனேயர் நம்மை வரவேற்கிறார் போலும்! அவரைச் சேவித்து, அவர் அருள் பெற்று சற்று தொலைவு நடந்தால் தண்ணீர் நிரம்பித் தளும்பும் திருக்குளம் ஒன்றைக் காணலாம். இதை 'யம தீர்த்தம்' என்பர். யமன் இதில் மூழ்கிச் சிவனை வழிபட்டதாகக் கூறுகிறார்கள். இதில் நாம் நீராடினால் 'நமனை அஞ்சோம்' என்றிருக்கலாமாம். இக் குளத்துப் புனித நீரைத் தலையில் தெளித்துக் கொண்டாலே போதும். யம பயம் ஏற்படாது என்றும் கூறுகிறார்கள் சிலர்.

யம தீர்த்தத்தின் கீழ்க்கரையில் நின்று மேற்கில் தென்படும் ஆலயத்தை நோக்கினால் அதன் எடுப்பான தோற்றம் நம் மனத்தை வசீகரிக்கிறது.

கோயிலினுள் புகும்போதே அதாவது இராஜகோபுரம் அமைக்கப்படும் பிரதான வாயிலின் முன்பேயே தனியாக நந்தி பகவான் காட்சியளிக்கிறார். துவாதச க்ஷேத்திரங்களில் ஒன்றான ஸ்ரீசைலத்தின் பிராகாரத்தில் ஒரே சந்நிதியில் ஐந்து நந்திகள் இருப்பதைப் பலர் அறிவர். ஒவ்வொரு நந்தியின் முன்பும் ஒரு சிவலிங்கம் உள்ளது. இந்த நந்திகள் சிறிது இடைவெளிகளில் அருகருகே இருக்கின்றன. கருவேலி கோயிலின் வெளியே தனித்திருக்கும் நந்தியைக் கவனித்தால் ஒரு காலத்தில் இக்கோயில் பல பிராகாரங்களைக் கொண்ட பிரம்மாண்டமான ஆலயமாக இருந்திருக்க, அப்போது பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்ச நந்திகளில், காலத்தின் கோலத்தால் இக் கோயிலின் பிராகாரங்களும், கோபுரங்களும் அழிவுற்று நான்கு நந்திகளும் காணாமல் போய், எஞ்சி நிற்கும் ஐந்தாவது நந்தி இதுவாக இருக்குமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இந்த நந்திக்கே பிரதோஷ பூஜை நடத்தப்பட்டு வருவதும் ஒரு விசேஷம்.

மேற்கண்ட நந்தி பகவானை வணங்கி, அவர் அனுமதி பெற்று, இரு கொம்புகளுக்கிடையே சிவபெருமானைத் தரிசித்து உள்ளே நுழைகிறோம். இராஜகோபுர நிலைப்படியைக் கடந்து சென்றால் இடப்புறம் ஐங்கரனும், வலப்புறம் வள்ளி நாயகனும் அருள்பாலிக்கின்றனர். அவர்களையும் வணங்கி விட்டு சந்நிதிகளுக்குப் போகும்முன், கோயில் பிராகாரத்தில் வலம் வருவோம். தென் சுவரின் கோஷ்டங்களிலுள்ள பல மூர்த்தங்களில் முதன்மையாக நம் கவனத்தைக் கவருவது அங்குள்ள அர்த்த நாரீஸ்வரர்! இந்த அழகிய சிற்பத்தைக் கல்லிலே மிகத் துல்லியமாக வடித்துக் கொடுத்த அக்காலச் சிற்பியை எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை.

சதுர்வேதங்களின் சாரங்களை உதடு அசைவின்றி உபதேசிக்கும் யோக தக்ஷிணாமூர்த்தி ஒரு கோஷ்டத்தில் கம்பீரமாக வீற்றிருக்கிறார். இவ்விறைவனை வணங்கி மேற்கொண்டு சென்றால் விஷ்ணு துர்கையும், பைரவரும் வட கோஷ்டங்களில் வீற்றிருப்பதைப் பார்க்கலாம். இப்புறச் சுவர்களில் பல கோஷ்டங்கள் காலியாகவே தென்படுகின்றன. அதில் பதிக்கப்பட்டிருந்த பல சிலைகள் பின்னப்பட்டு அகற்றப்பட்டு விட்டனவா அல்லது ஆங்காங்கு காணப்படும் மண்மேடுகளில் புதையுண்டுள்ளனவா அல்லது களவாடப்பட்டு விட்டனவா என்ற சந்தேகம் எவர் மனதிலும் எழலாம்.

இப்போது ஈச்வரன் சந்நிதானத்தை அடைகிறோம். ஐயன் சந்நிதியில் வடபுறம் மாவலி, பிரம்மா, திருநாவுக்கரசர், நாகர்கள், பைரவர், விஷ்ணு முதலிய மூர்த்திகளையும் தென்புறம் நாயன்மார்களோடு வீணா வாத்தியம் கொண்ட திரிமூர்த்தியையும் காண்கிறோம். ஈச்வரரின் நாமதேயம் சற்குணேச்வரர். இச்சிவலிங்கத்தை சற்குணராஜன் எனும் சிற்றரசன் அனுதினமும் வழிபட்டு இறுதியில் சிவபதம் எய்தியதாகவும், அதனாலேயே ஸ்வாமிக்கு அச்சிற்றரசன் பெயர் இடப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. நிர்குணமாய், நிர்மலனாய், நிராமயமாய்த் திகழும் ஆண்டவன், இங்கே சற்குணம் சார்ந்த சிவரூபமாய் தரிசனம் அளிக்கிறான்.

தில்லையிலே ஆனந்தத்தாண்டவம், மதுரையிலே, சந்தியாதாண்டவம், குற்றாலத்திலே திரிபுரத்தாண்டவம், திருவாலங்காட்டிலே காளி தாண்டவம், நெல்லையிலே முனி தாண்டவம் என்று ஆடிவிட்டு, அஜபா

நடனம் – ஹம்ஸபாத நடனம் – பிருங்க நடனம் என்ற உப நடனங்களையும் அரங்கேற்றிவிட்டு இறுதியில் இத்தலத்தில் கொடு கொட்டி ஆட்டத்தையும் நிகழ்த்திவிட்டுக் களைப்படைந்ததால் 'சிவனே' என்று இத்திருக்கோயில் மூலஸ்தானத்தில் இருந்து விட்டதாலோ என்னவோ அங்கு சாந்தி நிலவுகிறது; சான்னித்யம் பரவியுள்ளது. இதை நாம் பரிபூரணமாக உணர்கிறோம். அவ்வளவு சக்தி வாய்ந்த கருவறை.

இவ்விறைவனை அடிபணிந்து வணங்கி வந்தால், இருந்து வரும் நற்குணங்கள் நல்லோருக்கு என்றும் நிலைத்து நிற்கும்; மற்றோருக்கு இருக்கும் மாசுபட்ட குணங்கள் உடனே மறைந்து விடும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை. யிலேயேதான் இவரை சற்குணநாதர் என்று போற்றுகின்றனர்.

அடுத்து நாம் காண விருப்பது கருவேலியின் இருதய ஸ்தானம்! ஆம். அன்னையின் இருப்பிடம்! ஆண்டவன் ஆலயத்தினுள்ளே ஒரு தனிக் கோயில் கொண்ட அம்மன் ஐந்தரை அடி உயரத்தில் கிழக்கு முகமாக நின்ற கோலத்தில் ஸர்வாங்க சுந்தரியாகக் காட்சியளிக்கிறாள். இணை விழிகள் இரண்டிலும் கருணை ததும்பி வழிகிறது. அதரங்களில் முறுவலோடு புன்னகை இழையோடுகிறது. நான்கு திருக்கரங்கள். மேலிரு கரங்களில் அட்ச மாலை, கமல மலர் உள்ளன.

இந்த அட்ச மாலையை "தர்பணம்" அல்லது முகம் பார்க்கும் கண்ணாடி என்றும் கூறுகிறார்கள். ஆதி காலத்தில் சிலையை உருவாக்கினவர்கள் அட்சமாலை

✷ பிரும்மா

யின் மணிகள் பின்னமாகமாலிருக்க அதை பட்டைக்கல்லிலே செதுக்கியதோடு மாலை மேல் நோக்கி இருக்கும் வண்ணம் அமைத்தார்கள் என்றும், பிற்கால சிற்பியர் இவ்வழக்கத்தை மாற்றினர் என்றும் நிபுணர்கள் கருதுகின்றனர்.

கீழ் இடக்கரம் ஊரு ஹஸ்தமாகவும், வலக்கரம் அபய ஹஸ்தமாகவும் கொண்டு தரிசனம் தரும் தேவியின் திருமேனியில் முப்புரி நூலும் துலங்குகிறது. செவிகளிலும், கழுத்திலும் ஆபரணங்கள், சிரத்தில் சுடர் விடும் நவரத்ன மகுடம், காமனை எரித்த பரமனையே ஈர்த்த பேரழகுடன் அன்னை அழகு சுந்தரியாக விளங்குகிறாள்.

'அதரம் மதுரம்; நயனம் மதுரம்' என்று பாலகிருஷ்ணனின் வடிவழகைக் கண்டு மயங்கிப் பாடினார் வல்லபாச்சாரியார். அதுபோல, அன்னை அழகிய சுந்தரியாக விளங்குகிறாள். 'அங்கம் எங்கும் பொங்கும் பொலிவு கொண்ட அம்மையே! எங்களை உய்விக்க வந்த ஸர்வாங்கசுந்தரியே! எம் வாழ்வின் அங்கங்களும் உங்கள் அங்கங்களைப் போல் பாங்குறத் துலங்க உன் கடைக்கண் பார்வை ஒன்றே போதும் அம்மா' என்று பணியும் பக்தனின் வாய், ஓய்வின்றி அவள் புகழ் பாடும். கள்ளமிலா அவன் உள்ளத்தில் அன்னையில் திருஉருவம் ஆழப்பதிந்து விடும். இது வெறும் ஜால வார்த்தைகளன்று. அங்கு அந்த லோக நாயகியைக் காணும் போதெல்லாம் எவருக்கும் ஏற்படும் உணர்வின் அதிர்வுகளே இவை. அவள் வெறும் அழகு பொம்மையல்லள். மழலைகளான நம்மை மடியில் வைத்துக் கொஞ்சிக் குலாவும் அன்புள்ள அன்னை வடிவாகி நிற்பவள்.

நாவுக்கரசர் காலத்தில் செங்கற்களால் அமைக்கப்பட்டு பிற்காலத்தில் கருங்கல் திருப்பணியாக இந்த ஆலயம் உருவாகியிருக்க வேண்டும். ஏனெனில் ராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டுகளை இங்கே காணலாம். பிற்காலத்துச் சோழர்கள் காலத்தில்தான் வேறு சிவாலயங்களின் செங்கல் திருப்பணி, கற்றளி எனும் கருங்கல் திருப்பணியாக உருப் பெற்றது. மதுராந்தக உத்தம சோழனின் அன்னை யாரான செம்பியன் மாதேவியின் இணையற்ற சிவ பக்தியும், இதையடுத்து சிவபாத சேகரன் என்று போற்றப்பட்ட ராஜ ராஜ சோழனின் ஆழ்ந்த பக்தியுமே, காவேரி யின் இருகரை ஓரங்களிலும் சிவாலயங்கள் எழுப்பப்பட்டு அருள் மணம் பரப்பக் காரணமாயிருந்தன. கருவேலி கோயிலின் நிர்மாணம், சிலைகளின் அங்க லக்ஷணங்கள், இவைகளைச் சற்று ஆராய்ந்தால் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் பேயே பல பிராகாரங்களைக் கொண்ட பெரும் சிவாலயமாக எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம். மேலும் கோயிலைச் சுற்றி பல ஏக்கர் விஸ்தீரணத்திற்கு நிலபுலன்கள் இன்றும் இக் கோயிலுக்கு சொந்தமாக உள்ளது. இருப்பினும் இதன் வருவாயோ மிகச் சொற்பம்!

இப்படிப் பழம் பெருமையும் பல்வேறு சிறப்புகளும் அடங்கிய இக்கோயிலின் சிறப்பைப் பறை சாற்றும் கல்வெட்டுகள் பல இங்கு காணப்படுகின்றன. சோழர் காலங்களில் தெய்வீகச் சிலைகளை இக் கோயிலுக்குப் பெண்டிரே வழங்கியதாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. சேதிராமன் குடும்ப அரசி ஒருத்தி, பள்ளியறைநாச்சியார் உருவத்தை அளித்தார் என்று இன்னொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. புற்றிடம் கொண்டாள் முழகவித்தாள் என்ற பெண், திருநாவுக்கரசர் திருமேனியை வழங்கியதாக மற்றொரு கல்வெட்டில் காண்கிறோம். உத்தம சோழீ என்ற பெண் நந்தீசுவரர் திருமேனியை வழங்கியதாக வேறொரு கல்வெட்டு அறிவிக்கிறது. பசி தாங்கீச்வரர் என்ற பெயரில் சற்குணேச்வரர் அழைக்கப்பட்டார் என்றும், கோயில் மடைப்பள்ளியிலிருந்த மிது நந்தரையன் என்பவர் இரண்டாம் ராஜராஜன்

காலத்தில், ராஜ ராஜவிடங்கம் என்ற பெயரில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார் என்றும் கல்வெட்டுகள் மூலமாகவே அறிகிறோம்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாகக் கவனிப்பாரற்று மதில்கள் இடிந்து, பிராகாரங்கள் பாழ்பட்டு, மண்டபம் மறைந்து, மரங்கள் செடிகளால் தாக்குண்டு, கலைக் களஞ்சியங்களாகத் திகழ்ந்த அரும் பெரும் சிற்பங்கள் பல களவாடப்பட்டு, கோயில் இருந்த இட்மே மறைந்து விடுமோ என்று அஞ்சும்படி இத்திருக்கோயில் மிகப் பரிதாபமாகக் காட்சி அளித்ததாம். எங்கு நோக்கினும் சர்ப்பங்களும் வேறு பல விஷ ஜந்துக்களும் காணப்பட்டனவாம். உள்ளே போக வேண்டுமாயின் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஒற்றையடிப் பாதையில் அதுவும் நெருஞ்சி முட்கள் நிறைந்த வழியில் சென்றால்தான் அம்மையப்பன் சந்நிதிகளில் விளக்கேற்ற முடியும் என்றிருந்ததாம்.

காஞ்சி மாமுனிவர் பரமாச்சார்யாள் ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கருவேலியில் ஒருமுறை முகாமிட்டிருந்தார்கள். அங்குள்ள அருஞ் சிற்பங்கள் களவு போவதைக் கேட்ட அந்த மகான், கோயிலினுள் சென்று அம்மன் சந்நிதியில் கேட்பாரற்று ஒரு மூலையில் கிடந்த சக்தி வாய்ந்த ஐம்பொன் மேருவைக் கண்டுபிடித்து, அதைக் காஞ்சி காமாட்சியம்மன் சந்நிதியில் பத்திரப்படுத்தி விட்டாராம். சிலைகள் களவு போனதற்கு இன்று சாட்சியம் கூறுவதுபோல் அம்மன் சந்நிதியில் ஐம்பொன் நடராஜ விக்ரகம் இருந்த இடம் வெற்றிடமாகக் காட்சியளிக்கிறது. இந்தப் பொக்கிஷம் எப்போது கடத்தப்பட்டதென எவரும் அறிந்திலர். கேட்டாலே மனம் மிகவும் சங்கடப்படுகிறது.

சென்ற நூற்றாண்டில் அக் கிராமத்தில் கருவிலி ராமய்யர் (குழந்தை அய்யர்) என்ற பக்தர் இருந்தார். நிலம், நீச்சு என்றிருந்த போதிலும்,வந்த வருமானம் எல்லாம் அன்னதானத்திற்கே செலவிட்டாராம். 24 மணி நேரமும், அவரது இல்லத்தில் கோட்டை அடுப்பு எரிந்துகொண்டே இருக்குமாம். அவர் வீட்டு வழியாகப் போகும் அக்கம் பக்கத்து கிராமத்தார்கள் அவர் வீட்டினுள் சென்று உணவருந்தியே செல்வார்களாம். இதனால் இவர் வீட்டு உணவை உண்ணாதவர் அந்தச் சுற்று வட்டாரங்களிலேயே காண்பதரிதாம். விசேஷ காலங்களிலோ மாபெரும் அன்னதானம்! அன்னதானம் என்றால் ஏழைகளுக்குக் கஞ்சி வார்ப்பதன்று; பருப்பு, பாயஸத்துடன் நெய் மிதக்கும் அறுசுவை உணவு. சாப்பிட்டபின் கை கழுவ யமதீர்த்தத்திற்குப் போவார்களாம். அவர்கள் கைகளில் ஒட்டியிருந்த நெய் முழுவதும் குளத்தின் நீரில் இறங்கி, யம தீர்த்தம் முழுவதும் நெய் மிதக்குமாம். இதனால் அவரை 'அன்னதானப் பிரபு' என்ற பெயரிட்டே மக்கள் அழைத்தார்களாம். இந்தக் குழந்தை அய்யரின் வம்சத்தார்கள் கிராம மக்களுடன் ஒன்று சேர்ந்து 1996ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி நல்ல முகூர்த்தத்தில் கோயிலைச் செப்பனிடும் திருப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். மிகவும் சிதிலமடைந்த கோயிலையும் அதன் சுற்றுப்புறங்களையும் துப்புரவு செய்து, செப்பனிட்டுக் கோயிலில் பக்தர்கள் வந்து வழிபடும் வண்ணம் பல அரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இதற்கு சுமார் ஆறு லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. வடநாட்டு முஸ்லிம்களும், கிறிஸ்துவர்களும்கூட கணிசமான தொகையைக் காணிக்கையாகச் செலுத்தியுள்ளனர். சிதறிக் கிடந்த சிலைகள் சுத்தம் செய்யப்பட்டு, பழுது பார்க்கப்பட்டு, ஆகம விதிகளின்படி மீண்டும் அதன் இருப்பிடங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, சென்ற 1997 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் தேதி சிறப்பாகக் கோலாகலமாகக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அப்போது ஓர் அதிசயம் அவள் அருளால் நிகழ்ந்தது!

கோயில் கும்பாபிஷேகம் முடிந்து சுமார் மூன்று மாதங்களாகி இருக்கும். அம்பாள் சந்நிதிக்கு எதிரே சுமார் அரைகிலோ மீட்டர் தொலைவில் சேறும், தண்ணீரும் கொண்ட பயிர் விளையும் நிலத்தில் பூமியிலிருந்து சுமார் மூன்றடிக்கு மேல் ஒரு ஜோதி உதயமாகி, கிழக்கிலிருந்து வட மேற்கே மிதந்து சென்றதாம். மறைந்தும், தெரிந்தும் கண்ணாமூச்சி காட்டிய அந்த ஒளியைக் கண்டு பலர் மெய் சிலிர்த்தனராம். இந்நிகழ்ச்சியை நம்பாமல் கேலி செய்த அக்கிராமத்தின் நான்கு வாலிபர்கள் ஒருமுறை தனியே பதுங்கி அதன் வரவை எதிர்நோக்கியிருந்தனர். அவர்களுக்கு மிக அருகிலேயே அந்த ஜோதி திடீரென்று உதயமாயிற்று. அவ்வொளியின் வெளிச்சம் தாங்காமல், பயந்து அவர்கள் ஓடி கிராமத்தினுள் புகுந்து விட்டனர். மறுநாள் அவர்களுக்குக் கடுமையான காய்ச்சல்! உடல் நலம் பெறப் பல நாட்கள் ஆகிவிட்டதாம். 1997ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் அக்டோபர் வரை காட்சியளித்த இந்த ஜோதியால் வேறெவரும் பாதிக்கப்படவில்லை. சிதிலமுற்றிருந்த தன்னிருக்கையை மிகச் சிரமப்பட்டு சிரத்தையுடன் செப்பனிட்டு பொலிவும் புத்தொளியுமாக விளங்க வைத்த அக்கிராமத்தார்களுக்கு ஆசி வழங்கவே, அம்பாள் ஆனந்த வெள்ளத்தில் மிதந்து தரிசனம் தந்ததாக யாவரும் கூறுகிறார்கள். இவ்வொளிக்கு 'விசதீகரண தரிசனம்' என்று பெயர். அதாவது கருவேலி கோயிலில் தெய்விகம் மணப்பது உறுதி என்று தெரிவிக்கும் வெளிக்குறிப்பே அப் பேரொளியாகும்.

பரதீப ஜ்வாலா பிர்திவஸகர
நீராஜன விதி:
ஸுதாஸுதேச் சந்த்ரோபல ஜலல
வைரார்க்ய ரசனா!
ஸ்வகீயை ரம்போபி: ஸலிலநிதி
ஸௌஹித்ய கரணம்
த்வதீயாபிர் வாக்பிஸ்தவ ஜனனி
வாசரம் ஸ்துதிரியம்!

(ஸௌந்தர்ய லஹரி 100 ஆவது ஸ்லோகம்.)

(வாக்கிற்கு இருப்பிடமான தாயே! சூர்யனுக்கு கர்ப்பூர ஜ்வாலை காட்டுவது போலும், அம்ருத கிரணனான சந்திரனுக்கு சந்திரகாந்தகக் கல்லில் உண்டான நீரை அர்க்கியம் அளிப்பது போலும். கடல் நீரைக் கொண்டே கடலுக்குத் தீர்த்தம் அளிப்பது போலும், உம்முடையதான வாக்கினால், உம்மை ஸ்தோத்திரம் செய்கிறேன். தேவிக்கு அர்ப்பணம்)

ஜபல்பூர் நாகராஜசர்மா

★★★

காஞ்சி மகாபெரியவர்கள் பணித்தபடி திரு. நாகராஜ சர்மா அவர்கள் பற்பல வடநாட்டுக் கோயில்களுக்குச் சென்றுவிவரங்கள் சேகரித்தவர். ஆதி சங்கரர் ஸ்தாபித்த சிவலிங்கத்தைக் கண்டுபிடித்துப் பெரியவர்களுக்குத் தெரிவித்தவர். வடமொழி தமிழ்மொழி இரண்டிலும் பாண்டித்யம் உடையவர்.

கூற்றம் காய்ந்தவன் உறை கொட்டிட்டை

"இனிமேல் லதாங்கி ராகத்தில் பிறவா வரம் தாரும் பெம்மானே" என்று ஈசனை நினைத்துத் திரும்பத் திரும்பப் பாட வேண்டிய அவசியமில்லை. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அப்பர் பெருமானைப் போல் ஆசைப்பட்டு இந்த உலகில் பிறக்க விரும்பாதவர்கள், மறுபடியும் கருவடையும் குழியில் தள்ளப்படாமலிருக்க சுலபமான வழி ஒன்றிருக்கிறது. கும்பகோணத்திலிருந்து பூந்தோட்டம் செல்லும் வழியிலுள்ள "கருவிலி". என்ற திருத்தலத்துக்குப் போய் அங்கே கோவில் கொண்டுள்ள பரமேச்வரனையும் அம்பிகையையும் பக்தியோடு ஒருமுறை தரிசித்து வழிபட்டால் போதும். கர்ப்ப வாஸம் கிடையாது என்பது நிச்சயம்.



★ ஸ்வாமி கோபுரம் – திருக்குட நீராட்டு விழாவுக்குத் தயார் நிலையில்

தஞ்சை மாவட்டம் இசைக்கும், கலைகளுக்கும், பயிருக்கும் நீர் வளத்துக்கும், புலவர்களுக்கும் புகழ் பெற்றுள்ளதைப் போலவே கோவில்களுக்கும் பிரசித்தி பெற்றிருக்கிறது. ஆனால் அனேக கோவில்கள், காவிரி நதி தீரத்தில் உள்ள கலைச் செல்வங்களான கோவில்கள், புரப்பார் இன்றி இடிந்தும் சிதைந்தும் போயிருக்கின்றன. சத்தி முற்றப் புலவரின் மண்ணாகிய சத்திமுற்றம் கோவில் பட்டீச்வரத்தை அடுத்தே இருக்கிறது. ஆனால் கோபுரத்தின் மீது மரங்களும், செடிகளும் வளர்ந்து பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. பல கோவில்கள் முழுமையாகவே சிதைந்து போயவிட்டன. வடமொழியில் ஜீரணமாகி விட்டது என்று சொல்வது எவ்வளவு சரியாக இருக்கிறது! வயதான பெற்றோர் குழந்தைகளை வெளிநாடுகளுக்கு சுவீகாரம் கொடுத்து விட்டு, தனிமையில் வாடுவதுபோல் கடவுளர்களும் தனியாக இடிந்த கோவில்களில் வசிக்கிறார்கள்.

சில சமயம் திடீரென்று ஒரு கோவிலில் உள்ள ஈசனுக்கும் அம்பிகைக்கும் யோகம் பிறக்கிறது. கிராமத்திலிருந்து வெளியேறி மூன்று தலைமுறைகளாக வேறு வேறு இடங்களில் வசிப்பவர்களுக்குத் தங்களுடைய வேர்களைக்

கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கிறது. தங்களுடைய முன்னோர் வசித்த ஊரைத் தேடி வருகிறார்கள். கோவில் இடிந்து கிடப்பதைப் பார்க்கும்போது "நம்முடைய குல தெய்வத்துக்குத் திருப்பணி செய்ய வேண்டும்" என்ற எண்ணம் உண்டாகிறது. இப்படிக் கிராமக் கோவில்கள் சில புதுப் பொலிவு பெற்று விளங்குகின்றன.

கருவேலி என்று இன்று கூறப்படுகிற தலத்தில் குடி கொண்டுள்ள அருள் மிகு சற்குணேசுவரரும், அழகு என்ற சொல்லுக்கே விளக்கம் தருகின்ற சர்வாங்கசுந்தரியும் இன்று புத்தம் புதுப் பொலிவுடன் வீற்றிருக்கிறார்கள். "நம் ஊரில்கூட கோவிலை இவ்வளவு சுத்தமாக வைத்துக் கொண்டிருக்கிறார்களே" என்றுதான் பிரமிப்பாக இருக்கிறது. பிரகாரத்திலோ மண்டபத்திலோ ஒரு சிறு காகிதம், காய்ந்த சருகு ஏதாவது இருக்க வேண்டுமே. கிடையாது. ஒரு இடத்திலாவது ஒட்டடை தொங்க வேண்டுமே. கிடையாது. சற்குணேசுவரருக்கும் சர்வாங்க சுந்தரிக்கும் தொண்டு செய்யும் சத்புத்திரர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

கருவிலி என்ற தலம் ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக இருந்திருக்க வேண்டும். கோவிலில் உள்ள சிற்பங்கள் எல்லாமே அழகு வடிவமாக விளங்குகின்றன. தெற்குத் திசை நோக்கி வீற்றிருக்கும் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அர்த்தநாரீசுவரர், விஷ்ணு துர்க்கை முதலிய சிற்பங்களைச் செய்த சிற்பி மிகக் கைதேர்ந்த சிற்பியாக இருந்திருக்க வேண்டும். அத்தனை திருத்தம். முகத்தின் களை நம்மை ஈர்க்கிறது.



★ கும்பாபிஷேகம் – யாகசாலை

சற்குணன் என்ற ஒரு அரசனுக்கு ஈசன் இந்த இடத்தில் காட்சி தந்து ஆட்கொண்டாராம். அதனால் ஈசனின் பெயர் சற்குணேசுவரர். இறைவனை எல்லா நற்குணங்களும் கொண்டவராகக் கொண்டாடுவது எவ்வளவு மங்களகரமாக இருக்கிறது. சத்குணமுள்ளவர்களை காக்கும் சச்சிதானந்த மூர்த்தியல்லவா இவர்! பெரிய சிவலிங்க வடிவம். கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறார். நக்ஷத்திர விளக்கும் சர விளக்கும் பளபளவென்று மின்னுகின்றன. புஷ்பங்கள்கூட இறையாமல் சிவலிங்கத்தின் மீது சார்த்தப்பட்டிருக்கின்றன. சற்குணேச்வரரின் எதிரில் உள்ள அர்த்த மண்டபத்தில் பூஜைக்குரிய சாமான்கள் எல்லாம் வைக்கப்பட்டிருப்பதுகூட அழகுணர்ச்சியுடன் காட்சியளிக்கின்றன. ஈசன் சந்நிதியில் ஒரு புதிய சாந்

★ கும்பாபிஷேகத்திற்கு நீர் கொண்டு செல்லப்படுகிறது.

நித்யத்தை உணர்கிறோம். அமைதி தவழும் சூழ்நிலையில் உள்ளம் குவிந்து "சற்குணேச்வரா! பாரத நாட்டில் சத்குணம் நிறையும் படி அருளுங்கள்!" என்று வேண்டுகிறோம். தீபாராதனை செய்து பிரஸாதம் வாங்கிக் கொண்டு சுவாமியின் திருச்சுற்றில் வலம் வருகிறோம்.

அப்பர் சுவாமிகள் இந்தக் கோவிலுக்கு வந்திருக்கிறார். அந்தக் காலத்தில் இந்தத் தலத்துக்கு கொட்டிட்டை என்ற பெயர் இருந்திருக்கிறது.

"ஞாலம் மல்கு மனிதர்காள் நாடொறும்
ஏலமா மலரோடிவை கொண்டு நீர்
காலனார் வரு தன்முன் கருவிலிக்
கோலவார் பொழில் கொட்டிட்டை சேர்மினே.

"காலம் முடிந்து போகுமுன் உலக மக்களே! மணமுள்ள பூவும் இலையும் எடுத்துக்கொண்டு போய் சோலைகள் சூழ்ந்த கருவிலிக் கொட்டிட்டையை அடைந்து உய்யுங்கள்" என்று எடுத்துச் சொல்கிறார் அப்பர் பெருமான்.

"தோற்றுந்தீயொடு நீர்நிலந் தூவெளிக்
காற்றுமாகி நின்றான் தன் கருவிலிக்
கூற்றம் காய்ந்தவன் கொட்டிட்டை சேர்மினே"

மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார்.

கோவிலின் எதிரில் உள்ள குளத்துக்கு யமதீர்த்தம் என்று பெயர். யமதர்ம ராஜன் இந்தக் குளத்தில் மூழ்கி அருள்மிகு சற்குணேச்வரரைப் பணிந்து உய்ந்த தாகச் சொல்கிறார்கள். குளம் நீர் நிரம்பித் தளும்புகிறது. யமதீர்த்தத்தில் மூழ்கி ஸ்நானம் செய்பவர்களுக்கு யமபயம் இல்லையாம். சற்று தூரத்தில் அரிசிலாறு ஓடுகிறது. கருவேலி என்பது கூடப் பொருத்தமாகத்தான் இருக்கிறது. கருகரு வென்று பசுமை பாய்ந்த வயல்களும், மரங்களும் கண்ணுக்கெட்டிய தூரம் காட்சி தருகின்றன. கும்பகோணத்திலிருந்து வரும் வழியெல்லாம் பசுமைதான். கோவிலைச் சுற்றியும் விரைவில் சோலையாக மாறிவிடும் என்பதற்கு அறிகுறிகள் தெரிகின்றன. சின்னஞ்சிறு மரக்கன்றுகள் நடுவதற்குத் தயாராய்க் காத்திருக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்புகூட இந்தக் கோவில் சிதைந்து மதில் சுவரின் கற்கள் எல்லாம் நான்குபுறமும் சிதறிக் கிடந்ததாம். முள் செடிகள் மண்டி கோவிலுக்குள்ளே வரமுடியாமல் காடாக இருந்ததாம். பாம்புகள் நெளிந்து ஓடுமாம். இன்று பார்க்கும்போது நம்பிக்கையாகவே இல்லை.



★ *ஸ்வாமி கோவில்*

சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் கோவிலில் இருக்கின்றன. அரச குடும்பத்துப் பெண்கள் நந்திகேச்வரர், பள்ளியறை நாச்சியார், திருநாவுக்கரசர் சிலைகளைச் செய்து வைத்தாகக் கூறுகின்றன. கொட்டிட்டை சற்குணேச்வரருக்கு முன்காலத்தில் “பசிதாங்கீச்வரர்'' என்ற பெயர் வழங்கியதாம். எல்லா உயிர்களுக்கும் பசியையும் கொடுத்து, பசி தீர உணவும் கொடுத்து, உணவு கிடைக்காதபோது பசியைத் தாங்க சக்தியும் அளிக்கிறாரோ! அல்லது இவரே பசியைத் தாங்கிக் கொண்டிருக்கிறாரோ, எத்தனையோ காலமாய் நைவேத்யம் இல்லாமல் பசியைத் தாங்கிக் கொண்டிருந்திருக்கிறாரே, இந்தப் பெயரில் ஏதோ ஒரு சுவாரஸ்யமான கதை இருக்க வேண்டும்.

இரண்டாம் ராஜ ராஜன் காலத்தில், மிது நந்தரையன் என்பவர் ராஜாஜ விடங்கர் என்ற பெயரில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தாராம்.

கொட்டிட்டை என்ற பெயர்க்காரணம் தேவாரத்தில் காணப்படவில்லை. கொடுகொட்டி என்ற நடனத்தை இங்கே சிவபெருமான் ஆடியதாகச் சொல்கிறார்கள்.

இந்திரனும் ருத்திர கணங்களும் வந்து வழிபட்ட தலம் இது.

“ருத்திர கணத்தினர் தொழு தேத்துங் கருவிலிக் குணத்தினான்'' என்று தேவாரம் சான்று பகர்கிறது. குணத்தினான் என்று நாவுக்கரசர் பாடியதாலேயே ''சற்குணேசுவரர்'' என்ற பெயர் வந்திருக்கலாம்.

சற்குணேசுவரரை மகிழ்வித்து அவரது அன்பைப் பெறுவதற்காகத் தன்னை அழகு வடிவமாக அலங்கரித்துக் கொண்டு, தேவி வந்தாளாம். படைப்பில் உள்ள எல்லா அழகுகளையும் தருகின்ற சுந்தரி. குணமும் அழகும் சேர்ந்துவிட்டால் பிறகு என்ன வேண்டும்! சர்வாங்க சுந்தரி என்ற பெயரைச் சூட்டியவர் அன்னையின் தரிசனம் கிடைக்கப் பெற்றவராகத்தான் இருந்திருக்க வேண்டும். சற்குணேச்வரருக்குப் பக்கத்தில் தனிக்கோவிலில் கிழக்கு நோக்கி அருள்புரிகிறாள் அன்னை.

கருவறை மிகவும் சுத்தமாக இருக்கிறது. நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் கொண்ட மண்டபம். அர்த்த மண்டபத்தில் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுப் பளபளவென்று இருக்கிறது.

இந்தக் கோவிலை கருவிலிராமய்யர் என்ற பெரியவரின் வாரிசுகள் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்திருக்கிறார்கள். நான்கு காலம் பூஜைகள் குறைவின்றி நடைபெற்று வருகிறது.

அன்னை சர்வாங்க சுந்தரியின் கம்பீரம் சற்றுத் திகைக்க வைக்கிறது.

நலம் தரும் கருவேலி

இப்படியொரு கிராமத்துக் கோவிலில் இவ்வளவு பெரிய, ஐந்தடிக்கு மேல் உயரமுள்ள உயிர்ச்சிலையை எதிர்பார்க்கவில்லை. காசு மாலையும் காரையும் அணிந்துகொண்டு புருவங்களின்மீது சந்தனம் பளிச்சிட தயை நிறைந்த இரு விழிகளால் நம்மைப் பார்க்கிறாள் சர்வாங்க சுந்தரி. அபய ஹஸ்தத்தால் நமது பயத்தைப் போக்குகிறாள். அக்ஷ மாலையும் தாமரையும் தோள்களுக்கு மேலே ஏந்தி நிற்கிறாள். இடது கை ஊரு ஹஸ்தமாக விளங்குகிறது. அழகான திருவாசிக்கு முன்னால் ஞான தேவதையாய் தரிசனம் தருகின்ற அன்னை. 'தயை அழகா? ஞானம் அழகா?' என்ற கேள்வி மனத்தில் எழுகிறது. ஞானமும் தயையும் சேர்ந்துவிட்டால் அந்த அழகுக்கு ஈடு இணை ஏது?

அம்பிகைக்கு அர்ச்சனை செய்யத் தொடங்குகிறார் ஸ்வாமி ஸச்சித் ஆனந்தன். பொறுமையாக பூஜைக்குரிய பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டு பலகையில் அமர்ந்து கிண்ணத்தில் உள்ள குங்குமத்தால் சிட்டிகை சிட்டிகையாக அம்பாளின் பாதங்களில் சமர்ப்பிக்கிறார். சுத்தமான தெளிவான உச்சரிப்புடன் லலிதா திரிசதீ முழுவதையும் ஓதி வலது பாதத்தில் சிறிது குங்குமம் இடது பாதத்தில் சிறிது குங்குமம் என்று மாறி மாறி இட்டு ஒலி வடிவமாகவே அம்பிகையை அங்கே எழுந்தருளச் செய்கிறார்.

ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள் இந்தக் கோவிலில் பூஜை செய்ய வந்திருப்பதும், இங்கேயே இருந்து கோவிலை நன்றாக வைத்துக் கொள்வதும் சற்குணேசுவரரின் அடியார்கள் செய்த பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்வாமிகளின் பூர்வோத்திரத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டேன். முதலில் அடாமிக் எனர்ஜி கமிஷனில் பெரிய உத்தியோகத்திலிருந்தவர். (லயோலா கல்லூரியில் படித்து ஆராய்ச்சிப்பட்டம் பெற்றவர்) பிறகு அமெரிக்காவில் டென்னஸி மாநிலப் பல்கலைக் கழகத்தில் Astrophysicist ஆக இருந்தவர்; பின்னர் சிகாகோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

திடீரென்று எல்லாவற்றையும் துறந்து பாரதம் திரும்பினார். திருவண்ணாமலை குகையில் சிலகாலம் தியானம் செய்து கொண்டிருந்தார்.

அருள்மிகு சற்குணேசுவர சுவாமி கோயில் நிர்வாகக் குழு அங்கத்தினரான



★ *சிவகாம சுந்தரி*



திரு. வி. வைத்தியநாதன் அவர்களும் பரம்பரை தர்மகர்த்தாவான டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஸ்வாமிகளை கருவிலி கோவிலில் வந்து இருக்கும்படி சொன்னபோது அதை ஈசனின் கட்டளையாக ஏற்றுக் கொண்டு வந்து பூஜைகள் செய்து வருகிறார்.

"விதியின் எழுத்தைக் கிழித்தாச்சு முன்னம்
விட்ட குறை வந்து தொட்டாச்சு
மதியமிர்தமும் உண்டாச்சு"தென்று

கோபால கிருஷ்ண பாரதியார் பாடினாரே, அந்த அற்புதம் இன்றுகூட நிகழத்தான் செய் கிறது என்பதை அறியும்போது வியப்பாக இருக்கிறது.

உய்யு மாறிது கேண்மின் உலகத்தீர்
பைகொள் பாம்பரையான்
படையார்மழுக்
கையினான் உறைகின்ற கருவிலிக்
கொய்கொள் பூம்பொழில்
கொட்டிட்டை சேர்மினே!

அப்பர் பெருமானே "கொட்டிட்டை சேர்மினே" என்று சொல்லியிருக்கிறார். உய்யும் வழி அதுதான் என்று கூறுகிறார். உய்வதற்குச் சுலபமான வழிதான். கும்பகோணத்துக்கு ரயில் ஏறி விடலாம்.

ஆனந்தி

★★★

ஆனந்தி ராமச்சந்திரன் சென்னை கலாக்ஷேத்திரத்தில் ஆடற்கலை ஆசிரிய ராக இருந்து ஓய்வு பெற்றவர். தென்னாட் டுக் கோவில்களைப் பற்றி 'தெய்வ தரி சனம்' என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

★ ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

Goddess the Beautiful & God the Benevolent.

